Federation of Tamil Sangams North America
SINCE 1988

கோடை மலர்

# அருவி


திருவள்ளுவர் ஆண்டு 2054 / வைகாசி சூன் 2023



## உள்ளே


36-வது பேரவை விழாச் செய்திகள் 08
அப்பாலிருந்து ஒரு செய்தி.. - கவிதை 16
கோடை ஒன்று கூடல் 24
நினைவலைகள் 29
அகிலம் நீ!- கவிதை 38
வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் தமிழ்ப் பணிகள் 39
சுரபியின் கீழடி 46
நினைவில் நின்றவர்கள் 47
தனிமைப்படுத்தப்பட்ட இதயத்தின் கூக்குரல் - கவிதை 56
வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் அறிமுகம் 58

# பேரவைத் தலைவர் மடல்



அமுதே தமிழே, அழகிய மொழியே!! வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் உறுப்பினர் சங்கத்தின் அங்கத்தினர்க்கு என் வணக்கம். பேரவையின் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மற்றும் கொடையாளர்களுடன் அருவி இதழ் வாயிலாக மீண்டும் உரையாடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

முதலில் அனைவருக்கும் தொல்காப்பியர் நாள், மற்றும் உலகத் தமிழ் நாள் நல்வாழ்த்துகள். மேலும் பேரவை மகளிருக்கு எனது இனிய அன்னையர் நாள் நல்வாழ்த்துகள்.

பேரவையின் 36-ஆவது ஆண்டு விழா சாக்ரமெண்டோவில் யூன் 30, யூலை 1, 2 திகதிகளில் நடக்க இருப்பது நீங்கள் அறிந்ததே. இவ்விழா தமிழர்களின் குடும்ப விழா. என் இளவயதில் நான் மதுரையில் வசித்து வந்த முகமதியர் தெருவில், என் நண்பர்களோடு சேர்ந்து களிமண்ணால் ஆன ஒலி பெருக்கி, இசைத் தட்டுகள், ஒலிவாங்கிகள் செய்து விளையாடி இருக்கிறேன். ஒரு நாள் நண்பன் ஒருவன் வந்து இணையும் முன்பே நாங்கள் விளையாட்டைத் தொடங்கிவிட்டோம். அவன் வந்ததும், “சாகுல், என்னடா லேட்டு, நீயும் விளையாட வாடா,” என்று கூறிவிட்டேன். சாகுல் அமீது சினத்துடன், “இது நாம எல்லாரும் சேர்ந்து கட்டுற ரேடியோ சர்வீசு, இதுக்கு என்னையே ஒரு வெளியாள் மாதிரி கூப்பிடறியேடா?” என்று கடிந்து கொண்டது இன்றும் எனக்கு நினைவில் இருக்கிறது. ஆம், பேரவையின் விழா நம் குடும்பத் திருமணம் போன்றது. அதற்கு உறவுகளான உங்களை அழைப்பதற்காக என் மேல் சினம் கொள்ள வேண்டாம் நண்பர்களே. அன்று சாகுலிடம் சொன்ன அதே சொற்களை சிறிது மாற்றி உங்களுக்கு சொல்கிறேன், “நீங்கள் இல்லாமல் விழா நிறைவு பெறாது. அருள் கூர்ந்து, நினைவு படுத்துவதாக எடுத்துக் கொள்ளுங்கள்!”

இப்போது தமிழ்ப் பள்ளிகள் பலவும் ஆண்டின் இறுதி வகுப்புகளை நடத்திக் கொண்டிருக்கும். பள்ளி நிர்வாகிகளும், வரும் ஆண்டில் பள்ளியின் நோக்கம் பற்றி ஏற்கனவே எண்ணத் தொடங்கி இருப்பார்கள். நானும் நியூயார்க்கில் தமிழ்ப் பள்ளியைத் தோற்றுவித்து நிர்வகித்தவன் என்ற அளவிளேனும் வட அமெரிக்காவில் தமிழ்க் கல்வி எப்படி இருக்கவேண்டும் என்ற என் எண்ணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

வரலாறு, பண்பாடு ஆகியவற்றை முதன்மைப்படுத்தாது கொடுக்கப்படும் தமிழறிவு உயிர்ப்பற்ற இயந்திர அறிவாக, கடலில் விழுந்த மழையைப் போலப் பயனற்றுப்போகும் என்பதை மனதில் கொண்டு, நம் தமிழ் அறம், அதனுடன் பின்னிப்பிணைந்த மூத்த தமிழ்ப் பண்பாடு, அதில் விளைந்த தமிழ் மொழியின் தொன்மை ஆகிய கூற்றுகளையும் அடுத்த தலைமுறைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நம் குழந்தைகள் தமிழ்ப் பண்பாட்டின் வழி பெருமை மிக்க தமிழர்களாக வளராமல், வெறும் தமிழ் தெரிந்தவர்களாக மட்டுமே இருந்து விடக்கூடாது என்னும் உங்கள் தமிழ் அறம் அனைத்துத் தமிழர்க்கும் பெருமை சேர்க்கும்.

சிறந்த நெறி மற்றும் ஒழுக்கம் வாயிலாக உலகத்தாருடன் பொருந்தி அன்போடு வாழும் மனப்பக்குவத்தை பண்பாடு என்பார்கள். தமிழில் சால்பு, சான்றாண்மை, குணநலம் முதலிய சொற்களும் பண்பாடு சார்ந்து சொல்லப்படுகின்றன. சான்று, அதாவது ஓர் எடுத்துக்காட்டாக வாழ்பவர்கள் சான்றோர்கள்! கலித்தொகையும் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் (133:8) என்கிறது. திருக்குறளில் சான்றாண்மை என்று ஓர் அதிகாரமே உண்டு. சொல்லப்போனால் திருக்குறளில் உள்ள அதிகாரங்களை கூர்ந்து நோக்கினால் தமிழர் பண்பாடு பற்றி எளிதில் அறியலாம். அறிவைவிடவும் பண்பாட்டிற்கே வள்ளுவர் முக்கியத்துவம் தருகிறார்.

அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்

தன் நோய்போல் போற்றாக் கடை (315).

அரம்போலும் கூர்மையர் ஏனும் மரம்போல்வர்

மக்கட்பண்பு இல்லா தவர் (997).

பண்பில்லாதவர்களை அஃறிணையாகவே சொல்லிவிட்டார். மனப்பக்குவம் பல நிலைகளில் பண்பாடாக வெளிப்படுகிறது. பொறுமை, விட்டுக்கொடுத்தல், பிறர் நலம் பேணுதல் (ஈகை), நற்சார்பு, பெருமிதம், அருளுள்ளம் என்று பண்பாடு பல வடிவங்களில் வெளிப்படுகிறது என்று படித்திருக்கிறேன். தமிழர் அறத்தின்படி பண்பாடு என்பது பிறப்பின்படி வருவது அன்று! பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று வள்ளுவர் செல்லியிருக்கிறார்.

அண்ணல் காந்தியடிகளின் அறைகளில் மூன்று குரங்கு பொம்மைகளைப் பார்த்திருப்பீர்கள். அது நேரடியாக நாலடியார் செய்யுளின் வெளிப்பாடு என்கிறார் முனைவர் சோ. நா. கந்தசாமி அவர்கள். பல போரில் வென்றவனை விட தன் பொறி புலன்களை வென்றவனே பண்பட்டவன் என்கிறார். பிறரின் இரகசியங்களை ஒட்டுக்கேட்பது மாந்தர் இயல்பு, அந்நிலை வரும்போது காதினை செவிடாகவும், மற்றவரின் இணையரை அல்லது காதலரைக் காணும்போது குருடாகவும், கோள் சொல்லும் எண்ணம் தோன்றினால் ஊமையாகவும் இருக்கவேண்டும் என்கிறது நாலடி.

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்

தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய

புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல், யாதும்

அறங்கூற வேண்டா அவற்கு.

பிறர் நலன் பேணுதல் என்பது பண்பாட்டில் மிக முக்கியமான ஒன்று. இன்னாசெய் தாரை ஒருத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல் என்பது ஐயன் வள்ளுவன் கூற்று. பொருள் ஈட்டுவது தேவையானது (பொருள் செயல்வகை) என்றாலும், அப்படிச் சேர்த்த பொருளை வைத்து என்ன செய்கிறோம் என்பதில் தான் பண்பாடு வருகிறது. வேந்தனாக இருந்தாலும் வேடனாக இருந்தாலும் உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் ஒன்றுதான். தேவைகளுக்கு மீறிய செல்வம் இருந்தால் அதைப் பயன்படுத்த முடியாது. ஆகவே, தன் செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வது தான் செல்வத்தைப் பெற்றதன் பயன் என்ற உயர்ந்த கருத்தைப் புறநானூற்றுப் பாடல் 189-இல் நக்கீரர் செல்வத்துப் பயனே ஈதல் என்று கூறுகிறார். இம்மாதிரியான அறங்களை உடனே செய்யுங்கள், காலம் தாழ்த்தாதீர்கள். இந்த வாழ்க்கை நிலையற்றது, வாய்ப்புக் கிடைக்கும் போது அறச்செயல்களை செய்து விட வேண்டும். யாரும் நிரந்தரமாக இப்பூமிப் பந்தில் இருந்து விடப் போவதில்லை, கதிரவன் எழும் ஒவ்வொரு முறையும் நம் வாழ்நாள் தேய்ந்து கொண்டிருக்கிறதல்லவா, அதனால் நாளும் அறம் செய்வீர் என்கிறது நாலடி. அஃதே நம் பண்பாடு.

வாழ்நாட்கு அலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅது எழுதலால்-வாழ்நாள்
உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல் (3.2)

இதையே வள்ளுவரும்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே

செல்லும்வாய் எல்லாஞ் செயல் (33) என்று அறன் வலியுறுத்துகிறார்.

பண்பாடு என்பது விழுமிய பண்புநலன்களைச் சுட்டுவதாகத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியலாம். இப்பண்பாடுகள் யாவும் அகப்பண்பாட்டு விழுமியங்கள். இவற்றின் முதிர்ச்சியால் விளைவது புறப்பண்பாடு-இலக்கியம், இசை, ஆடல், ஓவியம், சிற்பம் என நீட்டிச் சொல்லலாம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அறவுணர்வுகள், இலக்கியவளம், கலைவளம், பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள் என்பனவெல்லாம் அதன் பண்பாட்டின் அடையாளங்களாக மதிக்கத்தக்கன என்கிறார் இ. பி. டெய்லர்.

வீட்டையும் சுற்றத்தையும் பிரிந்து வேற்றிடம் வளரும் செடிகளான நமது அடுத்த தலைமுறைக் குருத்துகளுக்கு தங்கள் வேரைக் குறித்த வியப்பும் விளக்கமும் விழிப்புணர்வும் தேவை. தங்களது வரலாறு, இலக்கியப் பரப்பு, மற்றும் பண்பாட்டின் தொடர்ச்சி குறித்த பெருமிதம்தான், இவற்றைப் பல நூற்றாண்டுகளாகச் சுமந்து நமக்குக் கொண்டு தரும் மொழியின் மீது அவர்களுக்கு உண்மையான ஈர்ப்பையும் உருவாக்கும் என்கிறார் வலைஞர் வேதா என்பவர். அத்தகைய பெருமிதமும்

தன்னம்பிக்கையும் தரும் வகையில் தமிழ் குறித்த அறிவை அவர்களுக்குத் தர முன் வருவது நம் தமிழ்ப் பள்ளிகளின் மற்றும் தமிழ்ப் பெற்றோர்களின் கடமையாகும்.

வட அமெரிக்காவில் உள்ள தமிழ்ப் பள்ளிகள் மென்மேலும் செழித்து நம் மாணவர்கள் தமிழில் சரளமாகப் பேசி எழுதி தமிழர் பண்பாட்டின் ஊற்றுகளாக வளர நெஞ்சார வாழ்த்துகிறேன்.

'எங்கள் நாடு எங்கள் மொழி' யென
இயம்புந் திறனைத் தந்தவன் பாரதி
இயம்ப மறுத்து ஏளனம் செய்தோர்
எலும்பை முறித்தவர் பாரதி தாசன்!

என்று கவிஞர் கண்ணதாசன் அவர்கள் போற்றிய பாரதியும், பாரதிதாசனும் தமிழ் வளர்த்த புதுவை மண்ணில், வரும் கல்வியாண்டிலிருந்து அரசுப் பள்ளிகளில் தமிழ்நாட்டு பாடத்திட்டத்தை விடுத்து சி.பி.எஸ்.சி பாடதிட்டத்தை அமல்படுத்தும் திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன்படி தமிழ் மொழிப் பாடத்தை விருப்பப் பாடமாக எடுக்கலாம் என்றும் ஒன்றிய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது மிகவும் வருத்தம் அளிக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான நெடிய வரலாற்றை கொண்ட தமிழ் மொழியை விடுத்து பல பிராந்திய மொழிகள் கொண்டு சமைக்கப்பட்ட இந்தி மொழியை தமிழ் மண் மீதும், தமிழர்கள் மேலும் திணிக்கும் போக்கு இந்திய இறையாண்மைக்கு எதிரானது.

குண்டலமும் மேகலையும் சிலம்பும் முப்பாற்
குறள்மறையும் ஐந்திணையும் பதிற்றுப் பத்தும்
தண்டியும்தொல் காப்பியமும் நளவெண் பாவும்
தலைவளையா பதி, சிந்தா மணிக லிங்கம்
கொண்டவனின் பரணியோடு கலம்ப கங்கள்,
கோவேந்தர் உலாக்கள்மடல் பிரபந் தங்கள்
எண்டிசையும் புகழ்மணக்கும் பத்துப் பாட்டும்
என்னாகும் இந்தியெனும் பேய்பு குந்தால்?

என்று கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கேட்கும் வினா தமிழர்கள் அனைவர் நெஞ்சிலும் ஒலிக்கும் வினா. எனவே, ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தை கைவிட்டு, தமிழ்நாட்டு பாடத்திட்டமே தொடரும் வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த மடல் வாயிலாகக் கோரிக்கை வைக்கிறேன்.

தமிழ்நாடு ஆளுநர் திரு ஆர். என். இரவி அவர்கள், திராவிட மாடல் (நெறிமுறை) என்ற ஒன்று இல்லை என்றும் அது காலாவதியான கொள்கை என்றும் ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறி இருப்பது வருந்தத்தக்கது. அனைவர்க்கும் கல்வி, அக்கல்வி பயில அனைவரும் வரவேண்டும் என்ற நோக்கத்தில் 1920 செப்டம்பர் 16 அன்று நீதிக்கட்சியின் ஆட்சியாளர் சர். பிட்டி தியாகராயர் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கினார். இந்திய ஒன்றியத்தில் முதல் முறையாக கல்வி பரவலாக்கப்பட்டதற்கு அந்தத் திட்டம் ஒரு பெரும் காரணி அல்லவா? பின்னாளில் வந்த முதல்வர்கள் அதனைத் தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்தி மதிய உணவு, சத்துணவு, முட்டை, கலவை சோறு என்று வளர்ந்து இன்று காலைச் சிற்றுண்டியும் தந்து படிப்பதற்கு குழந்தைகளை அழைப்பதுதானே திராவிட நெறிமுறை. பெயரில் வேண்டுமானால் பங்காளிச் சண்டைகள் வரலாம் ஆனால் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்த நெறிமுறையில் தமிழர்கள் அனைவரும் இணைந்து பெருமை கொள்கிறோம். தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்களும், “சாதி, மதத்தால் மக்களை பிரிக்க நினைப்பவர்களுக்கு திராவிட நெறிமுறை என்றால் புரியாது, மக்களுக்கு சம்பந்தமில்லாத பொறுப்பில் உள்ளவர்களுக்கு திராவிட நெறிமுறை என்றால் தெரியாது. ஆட்சியின் முகம் அதிகாரம் அல்ல அன்பு, சனாதனம் அல்ல சமூகநீதி...” என்று சொல்லியிருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

தமிழ்ச் சொந்தங்களே! உலகெங்கும் உள்ள தமிழர்களின் உயர்வினையும், தமிழின் ஏற்றத்தையும் இரு கண்ணெனக் கொண்டு பேரவை துடிப்புடன் செயலாற்றுகிறது. இந்த மாபெரும் பணியில் எங்களுடன் இணைந்து செயலாற்றும் உங்கள் அனைவரையும் சாக்ரமெண்டோ நகரில் நடக்கும் 36-ஆவது பேரவை விழாவில் மீண்டும் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

வாழ்க வளமுடன், நும்வாழ்வை ஆள்க அறமுடன்.

அன்புடன்

**முனைவர் திரு. பாலா சுவாமிநாதன்**

# செயலாளர் கடிதம்



அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் வணக்கம்!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பெருமைமிகு சாளரமாகிய அருவி மலர் வாயிலாக இந்த கோடைக் காலத்தில் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி!

எதிர்வரும் யூன் 30, யூலை 1 மற்றும் யூலை 2 ஆகிய நாட்களில் கலிபோர்னியாவின் சாக்ரமெண்டோ நகரில் நடைபெறும் பேரவை விழாவினை நீங்கள் அனைவரும் ஆர்வத்துடன் எதிர் நோக்கி இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். வட அமெரிக்காவில், ஆண்டுதோறும், பல்லாயிரக்கணக்கானத் தமிழர்களை "தமிழ்" என்ற ஒற்றைப் புள்ளியில் இணைக்கும் ஒரே விழா நமது பேரவையின் தமிழ் விழா. இந்த 2023 ஆம் ஆண்டு நடைபெறும் விழாவானது பேரவையின் 36 ஆம் தமிழ் விழா. இவ்வாறு பல்லாண்டு காலம் தொடர்ந்து நடைபெறும் பேரவை விழாவிற்கு ஆதரவளித்து தமிழ் என்ற அடையாளத்தை வட அமெரிக்காவிலே உறுதியாக நிறுவுவதற்கு பங்களித்து வரும் அனைத்து வட அமெரிக்கத் தமிழர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும், தமிழ்ச் சங்கங்களுக்கும் பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும், பேரவையின் செயல்பாடுகளும், பேரவை விழாவின் தன்மையும் செவ்வனே முன்னேறி வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. அந்த வகையில், இந்த ஆண்டும் கலிபோர்னியாவின் தலைநகரான சாக்ரமெண்டோ மாநகரில் நடைபெறும் இவ்விழாவில் பங்கு பெறும் உங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகள். உங்கள் பங்களிப்பு பேரவையையும் பேரவை விழாவையும் ஒவ்வொரு ஆண்டும் மெருகேற்றிச் செல்கிறது.

இந்தப் பேரவை விழாவிலும் பல்வேறு தமிழறிஞர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பாடகர்கள், கலைத்துறையினர், மரபுக்கலை வல்லுனர்கள், சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பல்வேறு ஆளுமைகள் உங்களுக்காக சாக்ரமெண்டோவில் குழும ஆவன செய்திருக்கிறது பேரவை. இவர்கள் அனைவரும் பேரவை விழாவில் பங்கு பெற்று தமிழ் மற்றும் தமிழர் நலன் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பெறுகிறார்கள்.

இத்தகைய மாபெரும் விழாவில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் சார்பாக தொடர்ந்து தமிழ் மற்றும் தமிழர் நலன் சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். பேரவையின் உதவும் இதயங்கள் குழுவின் சார்பாக மனநல மேலாண்மை நிகழ்ச்சி மற்றும் தற்கொலை விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆகியன கடந்த மாதங்களில் நடத்தப்பட்டன. பேரவையின் இலக்கியக் குழுவின் சார்பாக "கதைகளும் நாமும்" என்ற தலைப்பில் எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் ஒருங்கிணைக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில், தொன்மை தொடக்கம் தொடர்ச்சி குழுவின் சார்பாக "சங்க இலக்கியங்களில் குரல் அற்றவர்களின் குரல்" என்ற தலைப்பில் தமிழ் ஆய்வாளர் திரு ஆர் பாலகிருஷ்ணன் இ. ஆ. ப. ( ஓய்வு) அவர்கள் உரை நிகழ்த்த இருக்கிறார்கள். பேரவையின் தலைமுறை இணைப்புப் பாலம் குழுவின் சார்பாக பேரவையின் இளம் இயக்குனர்கள் திரு அமரன் மற்றும் செல்வி யாமிகா அவர்கள் நடத்தும் கலிபோர்னியா மாகாணத்தின் சட்ட வரைவு 403 குறித்த ஒரு கலந்துரையாடல் நடைபெற உள்ளது. நீங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் secretary@fetna.org மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழ் வாழ்க!

**கிங்ஸ்லி சாமுவேல்**

**செயலாளர், வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை**

# ஆசிரியர் கடிதம்



அனைவருக்கும் இனிய வணக்கம்.

அருவியின் வாயிலாக மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பள்ளிகள் மூடப்பட்டு கோடை விடுமுறை தொடங்கி இருக்கும். குடும்பத்துடனும் நண்பர்களுடனும் வெளிநாட்டுச் சுற்றுலா, உள்நாட்டுச் சுற்றுலா என்று செல்லத் தொடங்கி இருப்பீர்கள். உங்களின் கோடைக்கால பயணத் திட்டத்தில் 36-வது பேரவை விழா நடைபெறும் சாக்ரமெண்டோவும் இடம் பிடித்திருக்கும் என்று உறுதியாக நம்புகிறோம். உங்கள் வருகையால் பேரவை விழா இன்னும் சிறப்புறும் என்பது திண்ணம்.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

என்ற குறளைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே எழுதி தண்ணீரின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தியுள்ளார் திருவள்ளுவர். ஏனெனில் நீர்ச் செல்லும் போக்கில் நகர்ந்து செல்வது நாகரீகத்தின் பண்பு. நீர் மேலாண்மை, நீர்ச் சிக்கனம் என்ற பல்வேறு விடயங்களை கருத்தில் கொண்டு, நீரைச் சேமிப்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கையாண்ட இனம், தமிழினம். நீர் நிலைகளுக்கென்று தமிழில் உள்ள பெயர்கள் அளவிற்கு வேறு எந்த மொழியிலும் இருக்கவியலாது. ஐக்கிய நாடுகளின் 2022 அறிக்கைப்படி, கிட்டத்தட்ட 200 கோடி மக்களுக்கு அன்றாட வாழ்விற்கு தேவையான சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை என்றும், வருடத்தில் பாதி நாட்கள் உலக மக்கள் தொகையின் பாதிக்கும் மேற்பட்டோர் அதீத தண்ணீர் பஞ்சத்தில் அல்லல் உறுவதாகவும் சொல்கிறது. இது மனிதர்களை மட்டுமன்றி உலகில் வாழும் அனைத்து உயிரினங்களையும் பாதிக்கும் ஒன்று. குறைந்து வரும் நீராதாரத்தைத் தவிர இயற்கையை மாசுபடுத்தும் பல்வேறு இன்னல்கள் நம்மை எதிர் நோக்குகின்றன. யூன் 5 அன்று, உலகச் சுற்றுச்சூழல் நாளைக் கொண்டாடும் வேளையில் "இந்த பூமி என்பது நமது மூதாதையர்களிடம் இருந்து நாம் பெற்றதல்ல; நமது குழந்தைகளிடம் இருந்து நாம் கடன் வாங்கியது" என்பதை நினைவில் நிறுத்தி நம்மால் இயன்றவரை இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அறத்தின் வழி நிற்றல் என்பது தமிழரின் தனிப் பண்பு. அறத்தில் மிக உயரியது இயற்கையைக் காத்தல். உலகின் மூத்த இனமான தமிழினம் இயற்கையைப் பாதுகாக்கும் பணியை முன்னெடுத்துச் சென்று உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

கோடை என்றால் நினைவிற்கு வருவது உறவுகளுடனும், நட்புகளுடனான ஒன்றுகூடல். கடுமையாக கோடை வெயில் வாட்டினாலும், நிழல் தருவாய் நம்மை எப்போதும் காக்கும் நட்புகளுடனும், உறவுகளுடனும் பாசப்பிணைப்பினை மேலும் உறுதி செய்வது கோடைக் காலமே. கோடைக் கால ஒன்றுகூடல் பற்றிய

அருமையான ஒரு கட்டுரையை அளித்திருக்கும் திருமதி நெல்லை உலகம்மாள் அவர்களுக்கு மிக்க நன்றி. அவருடைய கட்டுரை, தொண்ணூறுகளுக்கு ஒரு காலப் பயணம் செய்ததைப் போன்ற உணர்வினைத் தருகிறது.

அட்டைப்படத்திற்கு ஓவியம் அளித்த திரு ஜெரார்ட் இக்னேசியஸ் வட கரோலைனாவில் உள்ள சார்லட் நகரில் வசிக்கிறார். தொழில் முறையில் விசுவல் டிசைனரான இவர் "கிரியேட்டிவ் பேலட்" என்ற ஓவியப் பள்ளியில் முதன்மை ஓவிய ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். சென்னையில் பிறந்து வளர்ந்து, லயோலா கல்லூரியில் கலைத் துறையில் முதுகலை பட்டம் பெற்றவர். களிமண்ணில் சிற்பம் வடிவமைப்பது, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு பொம்மைகள் செய்வது ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர். “எல்லாக் குழந்தைகளும் கலைஞர்களே. வளர்ந்த பிறகும் கலைஞனாய்த் தொடர்வது தான் மிகக் கடினம்” என்ற பாப்லோ பிக்காசோ அவர்களின் கூற்றைத் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று சொல்லும் ஜெரார்ட் அவர்கள் கிராமத்துத் திருவிழா ஒன்றினை நமது கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியுள்ளார். தூரத்தே தெரியும் மலைகள், வீடுகள், தண்ணீரில் விளையாடும் குழந்தைகள், பனிக்கூழ் விற்கும் வியாபாரி, பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று கிராமத்து திருவிழாவின் அத்தனைக் கூறுகளையும் தன்னுடைய ஓவியத்தில் கொண்டு வந்துள்ளார். அவருக்கு அருவி மலர்க் குழு சார்பாக நனி நன்றிகள்.

அருவி இதழ் ஒவ்வொரு காலாண்டும், உங்கள் கரங்களில் தவழ இதன் பின் இயங்கும் தன்னார்வலர்களின் உழைப்பே காரணம். அது மட்டுமன்றி, ஒவ்வொரு தமிழ்ச் சங்கத்திலிருந்தும், செய்திகளைத் தொகுத்து உரிய நேரத்தில் அளிக்கும் தமிழ்ச் சங்க நிர்வாகிகளும் முக்கிய காரணமாகும். ஊர் கூடித் தேர் இழுத்தால் உலகத்தை வலம் வரலாம் என்பதை ஒவ்வொரு முறையும் நிரூபிக்கும் அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்

விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" - தமிழ்விடு தூது.

என்ற வரிகளை எண்ணி, நம் அனைவரையும் உணர்வால் இணைக்கும் தமிழ் அன்னையைப் போற்றி, உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் உங்கள் அனைவரையும் சந்திக்கிறேன்.

அன்புடன்

**இரம்யா ரவீந்திரன்**

**சார்லட், வட காரோலைனா**

# 36–வது பேரவை விழாச் செய்திகள்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து பேரவையின் 36-வது தமிழ் விழாவை கோலாகலமாக கலிஃபோர்னியா தலைநகர் சாக்ரமெண்டோவில், யூன் 30, யூலை 1, 2 தேதிகளில் கொண்டாடவிருப்பதை நன்கு அறிவீர்கள்.வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை ஆக்கபூர்வமான பல நிகழ்ச்சிகளை அரங்கேற்றவுள்ளது. இவ்வாண்டு விழாவின் கருப்பொருள், “தொன்மை, தமிழரின் பெருமை” என்பதாகும். இவற்றை பிரதிபலிக்கும் வகையிலும், தமிழ் இலக்கியம், தமிழ் கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் கீழ் வரும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- தமிழிசை: சங்கீத கலாநிதி திருமதி சுதா ரகுநாதன், திரு. ஜே. நாராயணன், திரு. கமலகிரண் விஞ்சாமுரி, திரு. அட்சய் அனந்தபத்மனாபன்
- இன்னிசை இரவு: திரைப்பட பாடகர்கள் திருமதி கே.எஸ். சித்ரா, திரு. வேல்முருகன், திரு. சத்ய பிரகாஷ், செல்வி பிரியங்கா, திரு. மூக்குத்தி முருகன், செல்வி மானசி, திரு.ஆரூரன்
- கருத்துக்களம்; இயக்குனர் திரு. கரு.பழனியப்பன் மற்றும் எழுத்தாளர் திரு. பவா செல்லதுரை
- பட்டிமன்றம் : சொல்வேந்தர் திரு.சுகி சிவம் , பேராசிரியர் திருமதி பர்வீன் சுல்தானா, பேச்சாளர் திரு.மோகனசுந்தரம்
- பாட்டுக்குப் பாட்டு : திரு. பி.எச். அப்துல்ஹமீது
- இசை வடிவில் திருக்குறள் : திரு. பிரதீப் சுவாமிநாதன்
- சேர்ந்திசை : திரைப்பட இசையமைப்பாளர் திரு. ஜேம்ஸ் வசந்தன்
- சின்னத்திரை நட்சத்திரங்கள்: ‘விஜய் டிவி புகழ்’ திரு.விஜய், திருமிகு மணிமேகலை, திரு. பாலா
- வணக்கம் வட அமெரிக்காவின் பேச்சுப் போட்டி, நடனப் போட்டி , பாட்டுப் போட்டி, சதுரங்கப் போட்டி , ஓவியப் போட்டி, நாடகப் போட்டி, இசைக்கருவி போட்டி ஆகியவற்றின் இறுதிப் போட்டிகள்.
- சக்தி யோகாலயா நிறுவனம் 5 முதல் 15 வயது சிறார்களுக்கு ஆரம்ப நிலை யோகா பயிற்சியும், யோகா நடனப் பயிற்சியும் அளித்து பேரவை விழாவில் இக்குழந்தைகளை மேடையேற்றவுள்ளது.

# அருவி மலர்க் குழு



**இரம்யா ரவீந்திரன்**
ஆசிரியர்
சார்லட், NC



**ஷீலா ரமணன்**
இணையாசிரியர்
சான் அன்டோனியா,TX




**உமா ராம்குமார்**
இணையாசிரியர்
நியூயார்க், NY



**இந்து ராவ்**
துணையாசிரியர்
நியூயார்க், NY



**பிரதிபா பிரேம்குமார்**
துணையாசிரியர்
அட்லாண்டா, GA



**விஜயகுமார் தேவராஜ்**
துணையாசிரியர்
நியூயார்க், NY



**ஜேசு சுந்தரமாறன்**
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**இளங்கோவன் சந்தானம்**
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**செந்தில் முருகன் வேலுசாமி**
துணையாசிரியர்
வாசிங்டன், D.C



**இராம்துரை பாலசுப்ரமணியன்**
துணையாசிரியர்
நோவி, MI



**மீனா சுந்தர்**
ஆலோசகர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA



**இளங்கோவன் தங்கவேலு**
ஆலோசகர்
செயின்ட் லூயிஸ், MO


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தொன்மை,
தமிழரின் பெருமை
இயக்குநர்
கரு.பழனியப்பன்
எழுத்தாளர்
பவா செல்லதுரை
கருத்துக் களம்
கருத்துக் களத்தில் நீங்களும் களமாடலாம்...
To Register : https://tinyurl.com/RegForKK
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

# ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கம்








ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கத்தோடு ஒரே குடையில் இயங்கும் ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ப்பள்ளிகளில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை உங்களுக்குத் தொகுத்து வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தமிழ்ப்பள்ளிகளும் கலை நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தி வருகிறது. இதற்கு மேடைக்கல்வி என்ற பெயரும் உண்டு.

கடந்த சில மாதங்களில் முக்கியமாக இரண்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேற்குக் கேட்டி, கேட்டி மற்றும் சுகர்லேண்ட் தமிழ்ப் பள்ளிகளின் சார்பாக நடந்த நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பானவை.

மேற்குக் கேட்டி மற்றும் கேட்டி தமிழ்ப்பள்ளியில் கடந்த மார்ச் மாதம் "முத்தமிழ் விழா" என்ற தலைப்பில் மாணவர்களின் இயல், இசை, நாடகம் சார்ந்த நிகழ்ச்சிகளை மிக அருமையாக வழங்கியது. அனைத்து மாணவர்களும் பெரியோர்களும் இதில் பங்கு கொண்டு மிகச் சிறப்பாக நிகழ்ச்சியை நடத்தி மகிழ்ந்தனர்.

கேட்டியில் நடந்த இந்த நிகழ்ச்சியில் முனைவர் திரு நா. கணேசன் என்பவர் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். மேலும் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ்ப் பள்ளி அமைப்பின் தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குழந்தைகளின் ஆடல், பாடல், மற்றும் நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் மிக அருமையாக இருந்தது. அதேபோல் மேற்குக் கேட்டியின் முத்தமிழ் விழாவிற்கு திரு. சொ. வினைதீர்த்தான் என்பவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பு செய்தார்.

அதன் பின்னர் சுகர்லேண்ட் தமிழ்ப் பள்ளியில் சென்ற ஏப்ரல் 15 ஆம் தேதி "சித்திரைத் திருநாள் மற்றும் ஆத்திச்சூடி திருவிழா" என்ற தலைப்பில் மிகச்சிறப்பான நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆத்திச்சூடியை மனப்பாடம் செய்து அதன் பொருளோடு மேடையில் சொன்ன விதம் அற்புதமாக இருந்தது.

# சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்




சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தில் உள்ளூர் எழுத்தாளர்களை, ஓவியர்களை, சிறந்த புகைப்படக் கலைஞர்களை, கவிஞர்களை ஊக்குவிப்பதற்காகவே வருடத்திற்கு மூன்று மலர்களாக வெளிவரும் சங்கத்தின் இதழான 'மல்லிகை மலர்' ஆறாம் வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாண்டின் ஏப்ரல் 14, தமிழ் வருடப்பிறப்பன்று, மல்லிகை இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.




ஏப்ரல் 15 ஆம் நாள் 2023 அன்று சித்திரைத் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. சங்கத்தின் புதிய சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று புதுக் குழுவின் அறிமுகமும் நடந்தது. வருடம் முழுவதும் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் தன்னார்வலர்கள் பாராட்டப்பட்டனர். கடந்த இரு வருடங்களாக மிக உத்வேகத்துடன் செயல்பட்டு வரும் இளைஞர் அணி, தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளி ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தும், தொடர்ந்து அங்குள்ள சூழ்நிலைகளை,தேவைகளை அறிந்து கொள்ளும் ஓர் இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

மேலும் மே 14,2023 அன்று பாடகர் மனோ அவர்கள் பங்கேற்ற,'மனோ 25 ' எனும் இசைக் கச்சேரியினைத் தமிழ்ச் சங்கமும்,தெலுங்கு சங்கமும் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தினர்.

# டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன்

டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் சார்பில் மார்ச் 26 அன்று மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் சிறப்பு வருடாந்திர அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. சுமார் 60 க்கும் மேற்பட்ட K-12 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு அவர்களது அறிவியல் திறமைகளை ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டார்கள்.



இதில் சிறப்பு விருந்தினராக மினசோட்டா பல்கலைக்கழக அறிவியல் பேராசிரியர் முனைவர் குமார் மல்லிகார்ஜன் கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். அவர் தலைமையிலான குழு மாணவர்கள் செய்து வைத்திருந்த அறிவியல் படைப்புகளைப் பார்வையிட்டு மாணவர்களிடம் செயல் விளக்கத்தையும் கேட்டறிந்தனர். பின்னர் மாணவர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்து குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.

அறிவியல் கருத்துகளையும் தத்துவங்களையும் கொள்கைகளையும், பொது விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பல்வேறு கருவிகளையும், சோதனைகளையும், அமைப்பு மாதிரிகளையும் நேரடியாகக் கண்டு பயன்பெறவும், ஒலி-ஒளிக் காட்சிகள் மற்றும் நேரடியான சிறப்பு சொற்பொழிவுகள் வாயிலாக புதிய கருத்துக்களைப் பெறவும், அறிவியல் கற்கும் ஆர்வத்தை வளர்ப்பதற்கான ஒரு தூண்டுகோலாகவும் அறிவியல் கண்காட்சி அமைந்தது.

இந்த நிகழ்வு மாணவர்களின் அறிவு மற்றும் செயல் திறன்களை வெளிப்படுத்தி புதியன படைக்கவும் ஆழ் மனதில் உறுத்திக் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கவும் வாய்ப்பளிக்கிறது. மேலும் அவர்களின் சிந்தனை வளம் பெருக சிறுவித்தாக விளங்குவதோடு, அவர்களின் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது.

டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் தலைவர் திரு. ஷான் அவர்கள் தன்னுடைய வாழ்த்துரையில் மாணவர்களின் திறமைகளைப் பாராட்டிப் பேசினார். டுவின்சிட்டீஸ் தமிழ்ப் பாடசாலை தலைவர் திரு. ஜெயப்ரகாஷ் அவர்கள் நன்றியுரை வழங்க, விழா இனிதே நிறைவுற்றது.

# பாரதி கலை மன்றம்









பாரதி கலை மன்றம் ஆண்டுதோறும் சீரிய முறையில் நடத்தி வரும் தமிழ்ப்பள்ளி போட்டிகள் இந்த ஆண்டு, மார்ச் 4, 2023 ஆம் நாள் செம்மையாக நடந்தேறியது. வசந்தகாலத் தொடக்கத்தில், பாரதி கலை மன்றம், டெக்சாஸ் மாநில அளவில் ஏற்பாடு செய்திருந்த பாரம்பரிய மற்றும் கிராமிய நடன நிகழ்விற்கான அரங்கம் முழுவதும் வண்ணமலர்கள் சிதறித் தெளித்தது போல் காணப்பட்டது. அழகிய நடனக் குழுகள் நம் தமிழ்ப்பண்பாட்டையும், கலாச் சாரத்தையும் பிரதிபலிக்கும் நடனங்களை இந்நிகழ் வில் அரங்கேற்றியது மிகவும் சிறப்பாக இருந்தது.

ஏப்ரல் மாதத்தில் முத்தாய்ப்பாக மூன்று நிகழ்வுகள் நடந்தேறியது.ஏப்ரல் 21ஆம் நாள் பட்டிமன்றப் புகழ் திரு. ராஜா மற்றும் திருமதி. பாரதி பாஸ்கர் அவர்களின் இனிய சந்திப்பு நிகழ்வு நடந்தது. ஏப்ரல் 22ஆம் நாள்,பாரதி கலை மன்றம் மற்றும் மீனாட்சி தியேட்டர்ஸ் இணைந்து வழங்கிய "ஸ்ருதி பேதம்" என்ற முழு நீள நாடகம் டாக்டர்.திரு.காஸ் சாரநாதன் அவர்களின் இயக்கத்தில் மிகச் சிறப்பாக நடந்தது. ஏப்ரல் 29ஆம் நாள் ஹூஸ்டன் மாநகர மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கிய நிகழ்வான பட்டிமன்றம் திரு.ராஜா அவர்களின் தலைமையில், திருமதி. பாரதி பாஸ்கர் மற்றும் ஹூஸ்டன் மாநகரப் பேச்சாளர்களுடன் இணைந்து மக்களுக்குச் சிறப்பு விருந்து படைத்தனர். நிகழ்வில் பாரதி கலை மன்ற இலக்கியக்குழு இந்த ஆண்டின் சித்திரை சிறப்பிதழ் மலரை சிறப்பு விருந்தினர்கள் திரு.பாரதி பாஸ்கர் மற்றும் திரு.ராஜா அவர்கள் முன்னிலையில் வெளியிட்டனர்.

# அயோவா தமிழ்ச் சங்கம்






ஒவ்வொரு ஆண்டும் அயோவா தமிழ்ச் சங்கம் மூன்று முக்கிய நிகழ்ச்சிகளை நடத்துகிறது. அவை தீபாவளி, பொங்கல் மற்றும் தமிழ் புத்தாண்டு நிகழ்வுகள்.

இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நிகழ்வு சித்திரைப் பெருவிழா என்ற பெயரில் ஏப்ரல் 22, 2023 அன்று கொண்டாடப்பட்டது. நாட்டியம், நாடகம், பறை, சிலம்பம், பேச்சு எனப் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தினோம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொண்ட இந் நிகழ்ச்சி மிகவும் வண்ணமயமான கொண்டாட்டமாக அமைந்தது. இந் நிகழ்ச்சிகளை அழகான தமிழில், குழந்தைகள் தொகுத்து வழங்கியது சிறப்பாக இருந்தது. சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அதன் பின்னர் அரங்கேறிய பாரம்பரிய பறை நடனம் நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்தது. துடிப்பான பெண்கள் நிகழ்த்திய சிலம்ப நிகழ்வும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இரவு உணவு வாழை இலையில் பரிமாறப்பட்டது. இதற்கு தமிழ்ச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பெரும் வரவேற்பு கிடைத்தது. அனைவருக்கும் பாரம்பரிய திருமண விருந்து நினைவுக்கு வந்தது. அனைத்து உறுப்பினர்களின் பெருமுயற்சியால் வாழையிலை விருந்து வெற்றிகரமாக நடந்தது.

குழந்தைகள் தமிழைப் பயில வேண்டும் என்ற எண்ணத்துடன், பல தன்னார்வலர்கள் ஒன்றிணைந்து, தமிழ்ப் பள்ளி ஒன்றை சில ஆண்டுகளாக நடத்தி வருகிறோம் ஆர்வமுள்ள குழந்தைகளுக்குப் பறை மற்றும் சிலம்பம் கற்பிக்க ஆரம்பித்துள்ளோம். ஆண்டு முழுவதும் பல்வேறு செயல்பாடுகளுடன், அனைத்துத் தமிழ் நண்பர்களையும் ஒன்றிணைக்கும் இடமாக எங்கள் தமிழ்ச் சங்கம் திகழ்கிறது.







# அப்பாலிருந்து ஒரு செய்தி...



கவிஞர் போகன் சங்கர்

பயணியே
அச்சமோ துயரோ இன்றி
என் கல்லறையைக் கடந்து செல்.
நீ போகிற ஊரில் இருப்பவர்களுக்கு
என் வாழ்த்துகள்.
அவர்களில் பலர் என் உறவினர்கள்.
பலர் என் அன்புக்குரியவர்கள்.
சிலர் என்னைப் பற்றி நினைத்துக் கொள்ள
விரும்பாதிருக்கலாம்.

அவ்வூரில் நான் விளையாடிய மன்றங்களுண்டு
படித்த பள்ளிகளுண்டு
ஏறிய மரங்களுண்டு.


பயணியே
அங்கு என் நண்பர்களுண்டு
எதிரிகளுண்டு.

என் பெயர் பொறித்த பலகைகள்,
என் கையெழுத்து இன்னமும்
அழியாது இருக்கும் ஆவணங்கள்..
இவையெல்லாம் உண்டு.

ஒரு ரகசியமான இடத்தில்
நானும் என் காதலியும்
எங்கள் காதலை
காற்றுக்கும் மழைக்கும்
வெயிலுக்கும்
தெரிவித்த செதுக்கலும் உண்டு.

பயணியே
நான் வாழ்ந்திருந்த
இந்த ஊருக்கு நல்வரவு.
அச்சமோ
துயரோ இன்றி
என் கல்லறையைக் கடந்துசெல்.

உன் ஊரை நினைத்தபடியே..
உன் காதலை மீட்டியபடியே..




வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
கவி பாடும் நேரம்
"மெட்ராஸ்" "கபாலி" மற்றும்
பல திரைப்படங்களின் பாடலாசிரியர்.
கவிஞர். உமாதேவி
தலைமையில்
கவியரங்கம்
To Register : https://tinyurl.com/FeTNA-Kaviyarangam2023
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும், சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
SAFE Credit Union Performing Arts Center, 1301 L St, Sacramento, CA 95814
தொன்மை, தமிழரின் பெருமை
LIVE CONCERT
MUSIC
NIGHT
இன்னிசை இரவு
LIVE CONCERT
MUSIC
NIGHT
சத்யபிரகாஷ்
சின்னக்குயில்
சித்ரா
வேல்முருகன்
பிரியங்கா
மானஸி
முக்கதி
முருகன்
ஆரூரன்
ஜுன் 30, ஜுலை 1, 2 - 2023
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

# மில்வாக்கி தமிழ்ச் சங்கம்








மில்வாக்கி தமிழ்ச் சங்க மகளிர் நாள் சிறப்பு நிகழ்ச்சி மார்ச் 18, 2023 சனிக்கிழமை நடைபெற்றது. பெண்களின் உடல் நலன், மன நலன், நிதி நலன் பற்றி சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினார்கள். மருத்துவர் திருமதி கீதா கணேசன் பொது மருத்துவம் பற்றிப் பேசினார். மருத்துவர் திருமதி வர்ஷா ஷா புற்றுநோய் தடுப்பு குறித்து உரையாற்றினார். “கெட் பாக் டு வெல்னஸ்“ நிறுவனர் திருமதி கிரிஜா சிவபுண்ணியம் மன நலன் பற்றிப் பேசினார். திருமதி எஸ்தர் துரைராஜ் கூட்டு விவசாயம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். நிதி ஆலோசகர் திரு. ரகு ராஜகோபாலன் நிதி நிர்வாகம் பற்றிப் பேசினார். பெண்களுக்கென்று பிரத்தியேகமாக நடந்த இந்த ஆங்கில மொழி நிகழ்ச்சியில், தமிழர் அல்லாத பெண்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி சனிக்கிழமை காலை மில்வாக்கி மாநகரத்தில் நடைபெற்ற “ப்ரூ சிட்டி மாரத்தான்” போட்டிக்கு மில்வாக்கி தமிழ்ச் சங்கம் மற்றும் “ஹங்கர் டாஸ்க் போர்ஸ்” இணைந்து உதவி செய்தனர். போட்டியாளர்களைப் பதிவு செய்வது மற்றும் டி-ஷர்ட் வழங்குவது, ஓடுபவர்களுக்கு வழி நெடுக தண்ணீர் வழங்குவது போன்ற பணிகளில் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த தன்னார்வலர்கள் பங்கெடுத்தனர்.

வரும் கோடையில் “அடாப்ட் எ ஹைவே” என்ற திட்டத்திற்காகச் சாலை ஓரங்களைத் தூய்மை செய்யும் பணிக்கு தன்னார்வலர்ககளைத் தற்பொழுது பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஜூன் மாதம் மில்வாக்கி தமிழ்ச் சங்கத்தின் வருடச் சுற்றுலா சசக்சு வில்லேஜ் பூங்காவில் நடக்க இருக்கிறது.

# மிச்சிகன் தமிழ்ச் சங்கம்

மிச்சிகன் தமிழ்ச் சங்கம் 2023 மார்ச் மாதத்தில் இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது.

மார்ச் 10 ஆம் தேதி மகளிர் தினத்தை முன்னிட்டு மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, மகளிர் நாள் சிறப்பு விவாத நிகழ்ச்சியினை மெய்நிகரில் வெற்றிகரமாக நடத்தியது. இந்த நிகழ்ச்சியில் கீழ்வரும் தலைப்புகளில் விவாதிக்கப்பட்டது

குழந்தை வளர்ப்பு என்பது:

1. குழந்தைகளை அறிவாற்றல் கொண்டவர்களாக வளர்ப்பது
2. பண்புடையவர்களாக வளர்ப்பது
3. மன/உடல் ஆரோக்கியத்தை பேணி வளர்ப்பது

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் அஜிதா அவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

மார்ச் 17 ஆம் தேதி மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியினை வெற்றிகரமாக நடத்தியது. இந்த போட்டியில் மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் பள்ளியின் மாணவர்கள்:

1. நான் பள்ளி கல்வி கண்காணிப்பாளர் ஆனால், கொண்டு வர விரும்பும் மாற்றங்கள்!
2. எனது முதல் அமெரிக்க/ பிற நாட்டைச் சேர்ந்த நண்பன்
3. இவர்கள் இருவரும் சந்தித்தால்!!

என்ற தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிச் சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலைமாமணி முனைவர். லேனா தமிழ்வாணன் அவர்கள் மெய்நிகரில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர். மேலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், சிறப்பு கட்டுரைகளுக்கும் பரிசளித்து விழாவினைச் சிறப்பித்தார்.

ஏப்ரல் 23 ஆம் தேதி நமது மிச்சிகன் தமிழ்ச் சங்கம் சித்திரைத் திருநாள், ஈகைத் திருநாள் மற்றும் பேச்சாளர் குழு துவக்க நிகழ்ச்சி என்று முப்பெரும் நிகழ்ச்சியை நேரலையில் நடத்தியது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நகைச்சுவை நாவலர் புலவர் மா. ராமலிங்கம் அவர்கள்




1. சித்திரை திருநாள் சிரித்து வாழ்க
2. ஈகை திருநாள் இனிதே வாழ்க
3. வெல்லும் சொல்லால் உலகை வெல்வோம்

என்ற தலைப்புகளில் விவாதித்து விழாவினைச் சிறப்பித்தார்.

ஏப்ரல் 30ஆம் தேதி மிச்சிகன் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர்கள், இளைஞர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து மிச்சிகனில் உள்ள உட்வர்ட் அவென்யூ நெடுஞ்சாலையினைச் சுத்தம் செய்தனர். இந்தப் பணியினை வருடத்திற்கு மூன்று முறை என ஒவ்வொரு வருடமும் மிச்சிகன் தமிழ்ச் சங்கம் செய்து வருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தொன்மை, தமிழரின் பெருமை...
சின்னத்திரை
நட்சத்திரங்கள்
Mirchi RJ
விஜய்
"Cook with Comali" புகழ்
மணிமேகலை
"Cook with Comali" புகழ்
பாலா
To Register : https://register.fetna-convention.org/
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

# போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம்

ஒரேகான் மாநிலத்தின், போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றத்தில், கடந்த மார்ச் முதல் பல நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப் பட்டது.




வசந்த கால விடுமுறையை ஒட்டி குழந்தைகளுக்கான தமிழ்த்தேனீ போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் 30-க்கும் அதிகமான குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இதில் அரும்புகள் நிலையில் ஹரி சுதன் ராகவேந்திரன், கிருஷ்ணேஷ் சிவகுமார், அவிக்னஸ்ரீ அருண் குமார் ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர். மலர்கள் நிலையில் பிரதேஷ்வர் ஸ்டாலின், குரு விதுரன், ஹர்ஷினி குமார் ஆகியோர் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர். மற்றும் கனிகள் நிலையில் சித்தார்த் ஆனந்த், சஷ்வின் சந்தோஷ் ஆகியோர் முதல் இரண்டு இடங்களைப் பெற்றனர். முதல் இடம் பெற்றவர்களுக்கு 'போர்ட்லண்ட் தமிழ்த்தேனீ 2023' பட்டங்கள் மே மாத இறுதியில் வழங்கப்பட்டது.

இந்த வருடத் தமிழ்ப் புத்தாண்டை கல்கியின் தமிழ் வரலாற்றுப் புனைக்கதை நாவல் அடிப்படையிலான பொன்னியின் செல்வன் 2 (தமிழ்) திரைப்படத்துடன் கொண்டாடினோம். இதற்காக 5 திரையில் பிரத்தியேகமாக திரையிட்டோம். 425 க்கும் அதிகமான போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்ற உறுப்பினர்கள் மற்றும் கொடையாளர்கள் சோளப்பொரியுடன் திரைப்படத்தை கண்டு மகிழ்ந்தனர். இந்த நிகழ்வில் பலர் சோழர்களைப் போல் உடையணிந்து, சோழர் காலத்திற்கே அனைவரையும் அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு சுவையான இரவு உணவு விருந்துடன் மகிழ்ச்சியாக நிறைவடைந்தது.

போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றத்தின் இளைஞர் குழு ஜூன் 2022 முதல் மே 2023 வரை 800க்கும் அதிகமான மணிநேரத்திற்கு பல தன்னார்வ தொண்டுகள் செய்து உள்ளனர். இவர்களில் 7 பேர் இந்த ஆண்டிற்கான PVSA (The President's Volunteer Service Award) வெள்ளி மற்றும் வெண்கலம் பதக்கங்கள் பெறுகிறார்கள். தன்னார்வ தொண்டுகளில் பங்கேற்ற பல இளைஞர்களுக்கு மே இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டனர்.

# சாஸ்தா தமிழ் அறக்கட்டளை




சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் ப்ளேனோ தமிழ்ப் பள்ளியின் 23 வது ஆண்டு விழா ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி வெகுச் சிறப்பாக நடந்தேறியது. மழலை நிலை முதல் 8 ஆம் நிலை வரை 400 க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆடல், பாடல், நாடகம் என்று பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மேடையேறி வழங்கினார்கள். பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரை தொடர்ந்து 8 மணி நேரம், பெற்றோர்கள், நண்பர்கள், ஊரிலிருந்து வந்திருந்த தாத்தா பாட்டி என அனைவரும் ஒன்றுகூடி நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். "யானோ அரசன்!, யானே கள்வன்!" என்று மழலை குழந்தைகள், கதையால் உருவான காப்பியம் என்று சிலப்பதி காரத்தை வழங்கியது குறிப்பிடத்தக்கது. பாரதியார் பாடல்கள், யோகாசனங் களின் முக்கியத்துவம், புவியை பத்திரமாய் பாதுகாக்க நாம் எடுக்க வேண்டிய முயற்சிகள், கீழடி அகழ்வாராய்ச்சி, கீழடியில் பாகுபலி என்று, தன்னார்வல ஆசிரியர்கள் அவர்களே எழுதி இயக்கிய நாடகங்களை, மிகுந்த ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து மேடையேற்றினார்.



அடுத்து, சாஸ்தா தமிழ் அறக்கட்டளை ஆண்டு தோறும் நடத்தும் நிதி திரட்டும் விழாவில், கடந்த ஆண்டும், இவ்வாண்டும், வட டெக்சாசு உணவு வங்கிக்காக திரட்டிய அமெரிக்க வெள்ளி 20,000 டாலர்களை, வட டெக்சாசு மாநிலத்தில், பசியோடு போராடுவோரின் பசியைப் போக்கும் பொருட்டு, 60,000 வேளைக்கான உணவினை வழங்கு வதற்காக அளிக்கப் பட்டது. சாஸ்தா தமிழ் அறக்கட்டளை, கடந்த 12 ஆண்டுகளாக, $825,000 டாலர்களுக்கு மேலாக நிதி திரட்டி, இங்கு அமெரிக்காவிலும், இந்தியா விலும் பல தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# கோடை ஒன்றுகூடல்

கோடை என்றாலே வெளுத்து வாங்கும் கத்திரி வெயில் தான் பெரியவர்களுக்கு நினைவில் வரும். ஆனால் குழந்தைகளுக்கோ கோடை என்றாலே குதூகலம். கோடை விடுமுறையில் ஒன்று கூடும் சொந்தங்கள், அத்தை பிள்ளைகள், பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள், அக்கம் பக்கத்து நட்புகள் என உற்சாகம் களைகட்டும். பெரியவர்கள் ஒன்று கூடி குடும்ப விவகாரங்களை விவாதிக்கையில், குழந்தைகள் ஒன்று கூடி மாமரம், புளியமரம், நெல்லி மரம் என எந்த மரத்தையும் விடாமல் காய்களையும், கனிகளையும் பறித்து உப்பு வைத்து சுவைக்கும் போது, நாக்கில் சிவ்வென ஏறும் புளிப்பை, முகம் சுருக்கி, கண்களை மூடி ரசிக்கும், இனிமைக்கு ஈடு எதுவும் இல்லை.

அதோடு பெண் குழந்தைகள் ஒரு குயர் நோட்டில் புள்ளிக்கோலம், கம்பிக் கோலம் என பலவிதமான கோலங்கள் வரைந்து தங்கள் படைப்பாற்றலை நிரூபிக்கும் தருணமாக அமையும். அது மட்டுமின்றி ஒயர் கூடை, க்ரோசா பின்னல் கூடை, ஜமிக்கி வேலைப்பாடுகள், திரைச்சீலை எம்பிராய்டரி, களிமண்ணில் பொம்மைகள், சிறு வீடு கட்டி விளையாட்டு, நொண்டி, கிளியந்தட்டு, ஐஸ்பால், கல்லா மண்ணா என உடலுக்கும் மனதிற்கும் நிறைவளிக்கும் செயல்பாடுகளும், விளையாட்டுகளும் தொண்ணூறுகளில் வளர்ந்த குழந்தைகளோடு முடிந்து விட்டது என்பதே நடைமுறையில் காணும் உண்மை.



**நெல்லை உலகம்மாள்**

கோடை வெயிலை வீணாக்காமல் கூழ் வத்தல், வெங்காய வடகம், மாங்காய், எலுமிச்சை, நார்த்தங்காய் ஊறுகாய் என பெரியவர்கள் ஒன்று கூடி, அடுத்த ஆறு மாதத்திற்கான தேவையானவற்றை தயார் செய்யும் வேலைகளில் ஈடுபடுவார்கள். அதிலும் குறிப்பாக வீட்டில் கல்யாணம், காது குத்து, சடங்கு போன்ற கொண்டாட்டங்கள் கோடை விடுமுறையின்

போது வந்துவிட்டால், உறவுகளும், நட்புகளும் வீட்டை நிறைத்து விடுவார்கள். முறுக்கு, மிக்சர், பூந்தி லட்டு, உளுத்தங்களி, பணியாரம், கூட்டாஞ்சோறு, உளுத்தம் பருப்புச் சோறு என வாய்க்கும் ருசியாக வயிறு நிரம்பியதா இல்லையா என்று கூடச் சொல்லத் தெரியாமல் விளையாட்டிற்கு இடை இடையே போகையிலும் வருகையிலேயும் தின்பண்டங்களை சுவைத்து மகிழ்வதை வாடிக்கையாகவே செய்து வந்தோம்..

இரவில் பெரிய சமுக்காளத்தை விரித்து அனைவரும் வரிசையாகப் படுத்திருக்கும் போது அந்த வீட்டில் உள்ள ஆச்சி அல்லது வேறு பெரியவர்கள் சொல்லும் பேய் கதையிலிருந்து, விக்ரமாதித்தன் கதை, தெனாலிராமன் கதை, மகாபாரதம், ராமாயணம், கொள்ளிவாய் பிசாசுக் கதை வரை அனைத்து கதைகளும் குழந்தைகளின் கற்பனைக் குதிரையை தட்டி விட ஏதுவாக இருக்கும். அது மட்டுமன்றி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கும் விடுமுறையாகவும் அமையும்.

இப்படி ஒவ்வொரு கோடை விடுமுறையும், எப்போது வரும் என்ற காத்திருப்போடு, எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும். இந்தக் காலத்தில் கோடை விடுமுறை என்பது சகோதர, சகோதரிகள் ஒன்று கூடும் காலமாகவே அமைகிறது. மேலும் குழந்தைகளுக்கு நீச்சல், கராத்தே, கிரிக்கெட், பரதம், படம் வரைதல், பெயிண்டிங், பாட்டு, நடனம் என கல்வி சாரா நிகழ்வுகளுக்கு நேரம் ஒதுக்க முடிகிறது தினமும் ஓடும் ஓட்டத்திலிருந்து மொத்த குடும்பத்திற்கும் விடுதலை. மொத்தத்தில் கோடை ஒன்று கூடல் அறிவுக் கொள்முதலாகவும்



# பெண்களின் ஏழு பருவங்கள்



பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

1. பேதை: 5-7 வயது
2. பெதும்பை: 8-11 வயது
3. மங்கை: 12-13 வயது
4. மடந்தை: 14-19 வயது
5. அரிவை: 20-25 வயது
6. தெரிவை:26-31 வயது
7. பேரிளம்பெண்: 32-40 வயது



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
பட்டிமன்றம்
Register NOW
சொல்வேந்தர் சுகி.சிவம்
பேராசிரியர், முனைவர் பர்வீன் சுல்தானா
பேச்சாளர் மோகனசுந்தரம்
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தொன்மை, தமிழரின் பெருமை...
பாட்டுக்குப் பாட்டு
இலங்கை வானொலிப் புகழ்
B.H.அப்துல் ஹமீது
அவர்களுடன் நீங்களும் பங்கு பெறலாம்...
To Register : https://tinyurl.com/PattukkuPattu
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

# வாழ்த்துவோம் வாரீர்!!!

## ஆஸ்கார் விருதுகள் பெற்ற ஆளுமைகளுக்கு வாழ்த்துகள் !!!

கலைஞர்களின் கலை மற்றும் தொழில்நுட்பத் திரைப்படத் துறையில் உள்ள தகுதியை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படும் மதிப்புமிக்க விருது தான் இந்த ஆஸ்கார் விருது. இது அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ் வழங்கும் வருடாந்திர விருது ஆகும்.



ஆஸ்கார் விருதுகள் 1927ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இருப்பினும் ஆஸ்கார் விருது எனப்படும் தங்க முலாம் பூசப்பட்ட சிலையை வழங்கும் போக்கு 1929ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டால்பி தியேட்டரில் தான் ஆஸ்கார் விருதுகள் வழங்கப்படுகிறது. திரைத்துறையை சேர்ந்த கலைஞர்களுக்கு இது முக்கியமான விருதாக கருதப்படுகிறது. இந்த விருதின் மூலம் உலக அளவில் சிறந்த திறமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்.

இந்த விருதின் வழி புதிய வேலை வாய்ப்புகள், ஊதிய உயர்வு மற்றும் உலகளாவிய ஊடக அங்கீகாரம் போன்றவை வெற்றியாளர்களுக்குக் கிடைக்கிறது.



## கார்த்திகி கோன்சால்வ்ஸ் மற்றும் குனீத் மோங்கா

சிறந்த ஆவணக் குறும்பட பிரிவில், நீலகிரி மாவட்டம், ஊட்டியைச் சேர்ந்த கார்த்திகி கோன் சால்வ்ஸ் மற்றும் குனீத் மோங்காவின் நெட்ஃபிக்ஸ் டாக்குமெண்டரி குறும்படமான 'தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்', 95-வது அகாடமி விருதுகளில் சிறந்த டாக்குமெண்டரி குறும்பட வகைக்கான ஆஸ்கார் விருதை வென்றுள்ளது. இந்த விருதினைப் பெற்று போட்டி ஆஸ்கார் விருதுகளை வென்ற முதல் இந்திய திரைப்படத் தயாரிப்பாளர்கள் என்ற பெருமையை இவர்கள் பெற்றுள்ளனர். முதுமலை வனப்பகுதியில் உள்ள தெப்பக்காடு என்ற கிராமத்தில் படமாக்கப் பட்டது. இந்த எலிபன்ட் விஸ்பரர்ஸ் ஆவணப்படம். யானைகளுக்காக வைக்கப்படும் மின்வேலியில் சிக்கிக் கொள்ளும் குட்டி யானையான ரகு மற்றும் அம்மு ஆகிய இரண்டு குட்டி யானைகளை பொம்மன் மற்றும் பெல்லி என்ற மலைவாழ் தம்பதி வளர்த்து வேறு பாகனிடம் கொடுக்கும் வரை அந்த யானைக் குட்டி களுக்கும் பொம்மன் பெல்லி தம்பதிக்கும் இடையே உள்ள பாசப் போராட்டங்களை விளக்கும் வண்ணம் இந்த ஆவணப்படம் உருவாகி உள்ளது. ஊட்டியில் பிறந்து கோவையில் கல்லூரி படிப்பை முடித்த கார்த்திகி கோன்சால்வ்ஸ் என்ற ஆவணப்பட இயக்குனரின் முதல் ஆவணப் படத்திற்கே ஆஸ்கர் விருது கிடைத்துள்ளது தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

# நினைவலைகள்



## பாவேந்தர் பாரதிதாசன்
## 132 வது பிறந்த நாள் ஆண்டு

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், தென்னிந்தியாவில் இருக்கும் புதுவையில், ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி, 1891 ஆம் ஆண்டில் கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவரது தந்தை, அவ்வூரில் பெரிய வணிகராக இருந்தார். பாரதிதாசன் அவர்களின் இயற்பெயர் சுப்புரத்தினம். அவரது தந்தையின் பெயரின் முதல் பாதியை, தன்னுடைய பெயரில் இணைத்து 'கனகசுப்புரத்தினம்' என்று அழைக்கப்பட்டார்.

"தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்" என்ற தேன் சுவைசொட்டும் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் 'பாவேந்தர் பாரதிதாசன்' அவர்கள். பெரும் புகழ் படைத்த பாவலரான பாரதி தாசன் அவர்கள், 'புரட்சிக்கவி' என்றும், 'பாவேந்தர்' என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்று, தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றியவர், பாரதிதாசன் அவர்கள், தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக் கதாசிரியர், எழுத்தாளர், கவிஞர், என பன்முகத் திறனாளர். தனது படைப்புகளுக்காக 'சாகித்ய அகாடமி விருது' பெற்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயர் தமிழ் உள்ளளவும் நிலைத்து வாழும்.



## எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களின்
## 90 வது பிறந்தநாள் ஆண்டு

தமிழ்த்தாயின் கலை மகன், எழுத்துலகின் ஞானசூரியன், எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களின் பிறந்த நாள் ஏப்ரல் 24 ஆகும் . பேச்சாலும் எழுத்தாலும் அனைவரையும் அதிர வைத்தவர் ஜெயகாந்தன். மேடை பேச்சிலோ நெருப்பு மழை, எழுத்துக்களோ சரவெடி. அரசியல், சினிமா, இலக்கியம் எதுவானாலும் அவரது தர்க்க ரீதியான பதிலடிகள் அனைத்தும் மறுவார்த்தை பேச இயலா முத்துச்சரங்கள். நாம் எங்கு இருக்கிறோமோ - எந்தத் துறையில் இருக்கிறோமோ - யார் மத்தியில் வாழ்கிறோமோ - அவர்களுக்காக வாழ்வது, அவர்களது உயர்வுக்காக உழைப்பது, பலனை எதிர்பாராமல் பாடுபடுவதுதான் மனிதனாய்ப் பிறந்ததற்கு காரணம் என்ற அர்த்தத்தை புரிய வைத்தவர் ஜெயகாந்தன். அமரத்துவம் பெற்ற படைப்புகளின் பிதாமகனுக்கு - தமிழ்த்தாயின் இலக்கிய மகனுக்கு - இலக்கியத் தாய் தனது தலைசிறந்த விருதான ஞான பீடத்தை 2002 ஆம் ஆண்டு அணிவித்து மகிழ்ந்தாள். 1972-ல் சாகித்ய அகாடமி, 2009-ல் இந்திய அரசின் பத்ம பூஷன், 2011-ல் ரஷ்ய விருது போன்றவைகள் அவரை மேலும் பெருமைப்படுத்தின. ஏப்ரல் 8, 2015 இரவு, 9.00 மணிக்கு, உடல்நலக்குறைவால் சென்னையில் ஜெயகாந்தன் காலமானார்.எனினும் அவரின் எழுத்துக்கள் வழி அனைவரின் நெஞ்சிலும் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

நினைவலைகள்

# புதுமைப்பித்தன் 118 வது பிறந்த நாள் ஆண்டு



நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி புதுமைப்பித்தன் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதி கடலூர் மாவட்டம் திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். இவரின் இயற்பெயர் சொ.விருத்தாசலம். இவர் எழுத்துப் பணியில் 15 ஆண்டுகளுக்கும் குறைவாகவே இருந்தார். ஆனால், அதற்குள் 100-க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 100-க்கும் மேற்பட்ட கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், எண்ணற்ற மொழிப்பெயர்ப்புகள், புத்தக விமர்சனங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவரின் அற்புதமான படைப்புகள் காஞ்சனை, நாசகாரக் கும்பல், மனித யந்திரம், பொன்னகரம், இது மிஷின் யுகம், சாபவிமோசனம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது, சிற்பியின் நரகம், செல்லம்மாள் போன்றவை. இவர் சொ.வி., ரசமட்டம், மாத்ரு, கூத்தன், நந்தன், கபாலி, சுக்ராச்சாரி, இரவல் விசிறிமடிப்பு ஆகிய புனைப் பெயர்களில் கதைகளை எழுதியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் தனி முத்திரை பதித்த புதுமைப்பித்தன் தனது 42வது வயதில் மறைந்தார்.

## சங்க காலத்தில் பறைகளின் வகைகள்;



ஆகுளி, எல்லரி, கிணை, தடாரி, தண்ணுமை, துடி, தொண்டகம், பணை, பம்பை, பறை, முரசு, முழவு

## ஆண்களின் ஏழு பருவங்கள்

பாலகன், விடலை, காளை, மீளி, மறவோன், திறவோன், முதுமகன்

| | |
|---|---|
| 1 - 12 வயது | - பாலகன் |
| 12 - 24 வயது | - விடலை |
| 24 - 36 வயது | - காளை |
| 36 - 48 வயது | - மீளி |
| 48 - 60 வயது | - மறவோன் |
| 60 - 72 வயது | - திறவோன் |
| 72 வயதுக்கு மேல் | - முதுமகன் |

# ஆர்கன்சாஸ் தமிழ்ச் சங்கம்









ஆர்கன்சாஸ் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடி, தமிழ்நாட்டின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தியது. நமது மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களின் சாரத்தை பிரதிபலிக்கும் துடிப்பான கலாச்சார நிகழ்ச்சிகளால் இந்நிகழ்வு மேலும் அழகுற்றது. மனதைக் கவரும் இசை, அழகான நடனங்கள், மனதைக் கவரும் கவிதைகள் ஆகியவற்றைக் கேட்ட பார்வையாளர்கள் பரவசம் அடைந்தனர். மேலும், தமிழ்க் கல்வி மற்றும் கலாசார மையத்தின் 15 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடி, வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களைத் தன்னார்வலத் தமிழ் ஆசிரியர்கள் ஆற்றுப்படுத்தினர்.

கொண்டாட்டத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று வாழை இலையில் பரிமாறப்படும் சுவையான தமிழ்நாட்டின் முறையினாலான இரவு உணவு. மசாலாப் பொருட்களின் நறுமணமும் பாரம்பரிய உணவுகளின் சுவைகளும் அனைவரையும் மகிழ் வித்தது. சுவை மிக்க பருப்புச் சாம்பார், சாம்பார், அப்பளம், இனிப்புப் பாயசம் மற்றும் வாயில் நீர் ஊறவைக்கும் காய் கறிகள் என இவ்விருந்து , விருந்துண்ட அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றது. வாழை இலைகளைத் தட்டுகளாகப் பயன்படுத்துவது ஒரு பாரம்பரிய தொடுதலைச் சேர்த்தது. அதுமட்டுமன்றி, இயற்கை மற்றும் நிலைத்தன்மையுடனான நமது தொடர்பைக் குறிக்கிறது. மக்கள் ஒன்றாக அமர்ந்து உண்பது, ஒற்றுமை மற்றும் தோழமை உணர்வை வளர்ப்பது மக்கள் ஒன்றாக அமர்ந்து உண்பது, ஒற்றுமை மற்றும் தோழமை உணர்வை வளர்ப்பது, சுவையான உணவை ருசிப்பதுபோன்றவை காண்பதற்கு மகிழ்ச்சி தருவதாக அமைந்தது.

இந்த நிகழ்வு ,நமது பாரம்பரியத்தை நினைவூட்டு வதாகவும், தலைமுறைத் தலைமுறையாக நமது பாரம்பரியங் களைப் பாதுகாத்து போற்று வதன் முக்கியத்து வத்தை நினைவூட்டுவ தாகவும் அமைந்தது. இந்த நிகழ்வு ஒருவரை யொருவர் சந்தித்து தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பையும் நல்கியது.

# அலபாமா தமிழ்ச் சங்கம்



அலபாமா தமிழ்ச் சங்கத்தில் ஏப்ரல் 24ஆம் தேதி சித்திரைத் திருவிழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. திருமதி.பாரதி பாஸ்கர் அவர்களும், திரு பட்டிமன்றம் ராஜா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வரவேற்பு உரையைத் தொடர்ந்து, பரதநாட்டியம், நடன நிகழ்ச்சி மற்றும் மாறுவேட நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தைகள் தமிழ்த் தாய், ஔவையார், சேக்கிழார், ஏ.ஆர்.ரஹ்மான், சுந்தர் பிச்சை போன்ற பல வேடங்களில் வந்து தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர்களை அறிமுகப்படுத்தினர்.

பின்னர் திருமதி பாரதி பாஸ்கர் அவர்களும், திரு. பட்டிமன்றம் ராஜா அவர்களும் பல நடைமுறைத் தலைப்புகளில், அவர்களுக்கே உரிய தனி நடையில் பேசி அனைவரையும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தனர். அதைத் தொடர்ந்து கேள்வி நேரம் நடைபெற்றது. இதில் பல கேள்விகளுக்கு பதிலும், அறிவுரையும் வழங்கினர். இறுதியாக அனைவருக்கும் இரவு உணவு பரிமாறப்பட்டு நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது.



## ஒலியும், ஒளியும்;

ஒலியும் ஒளியும் (Sound and light) மின் காந்தப் பட்டையின் (Electromagnetic Spectrum) ஒரே அங்கம் என்று தற்கால அறிவியல் கூறுகிறது. இதை அறிந்து தானோ என்னவோ தமிழ் மொழியில் மட்டும் ஒலி – ஒளி என்று ஏறத்தாழ ஒரே ஒலியுள்ள இரண்டு சொற்கள் இதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், ஏனைய மொழிகளில் வெவ்வேறு ஒலி அளவுச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# வெர்சீனியா தமிழ்ச் சங்கம்



வெர்சீனியா தமிழ்ச் சங்கத்தின் இளவேனிற்கால விழாவும் அன்னையர் தின விழாவும் ஞாயிறு மே 14, 2023 அன்று சிறப்பாக நடந்தேறியது. தமிழ்ச்சங்கம் உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தினரும் திரளாக வந்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

‘உறவுகளுடன் உண்போம்’ என்ற முழக்கத்துடன் கூட்டாஞ்சோறு உணவுக்குப்பின், அன்னையரின் சிறப்பைப் போற்றவும் நன்றி தெரிவிக்கும் வகையிலும், குழந்தைகள் அவர்களது அன்னைக்குச் சிறப்பு செய்தார்கள்.

கலைநிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, வந்திருந்த அனைவரும் சிறு சிறு குழுவாக இணைந்து தமிழ் ‘வார்த்தை’ விளையாட்டு மற்றும் தமிழ் குறுக் கெழுத்துப் போட்டியில் பங்குகொண்டார்கள்.

இது போன்ற போட்டியில், வெறும் ஐந்து முதல் பத்து பேர் மேடையில் விளையாடி யதைப் பார்த்து பழக்கப்பட்ட நமக்கு, ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பதின் மூன்று குழுக்களாக சற்றேறக்குறைய இரண்டு மணிநேரம் விளையாடியது ஒரு புது அனுபவமாக இருந்தது.

விழாவிற்கு வந்திருந்த அனைவரும் பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற்பாளர்களாக இருந்தது அனைவரையும் கவர்ந்தது. தமிழ்ச்சங்க உறுப்பினர்களும், ஊரிலிருந்து வந்திருந்த அவர்களின் பெற்றோர்களும் இதை வெகுவாக புகழ்ந்தார்கள்.

வெர்சீனியா சங்கத்தின் துணைத்தலைவர் திரு.சாகீர் உசேன் அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது.



**மலர் உண்டு; பெயரும் உண்டு;**
**ஆனால், இது தான் அது என**
**உறுதியாக அறிய இயலாது உள்**
**நிலையில் இருக்கும் மலர் எது?**

**கள்ளி மலர்**




# தென் மத்திய தமிழ்ச் சங்கம்




மெம்பிஸில் உள்ள தென் மத்திய தமிழ்ச் சங்கம் மே 6 ஆம் தேதி வருடாந்திர தமிழ் கலாச்சார நிகழ்ச்சியான "சித்திரை கலாட்டா" நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. தென் மத்திய தமிழ்ச் சங்கக் கலை இலக்கிய பிரிவு செயலாளர் பொன்னி அவர்கள் வரவேற்பு உரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வில் தமிழ் நடனம், இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வு மெம்பிஸில் உள்ள சௌத்விண்ட் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. வரவேற்புரைக்குப் பிறகு பல்வேறு தமிழ் நடனக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பாரம்பரிய நடனங்கள், நாட்டுப்புற நடனங்கள், நவீன நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு தமிழ் நடனங்களை நடனக் குழுவினர் நிகழ்த்தினர். நடன நிகழ்ச்சிக்கு பின், தமிழ் தொலைக்காட்சி புகழ் ஆத்திரேயா அவர்கள் பாடி வழங்கிய தேனிசை நிகழ்ச்சி இடம் பெற்றது. தென் தமிழ்ச் சங்கக் கலை இலக்கிய பிரிவு செயலாளர் பொன்னி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

நிகழ்ச்சியின் இறுதியாக அருமையான விருந்து நடைபெற்றது. இந்த நிகழ்வு மெம்பிஸில் உள்ள தமிழ்ச் சமூகம் உவப்பத் தலை கூடி, உள்ளப் பிரியும் இனிய மாலையாக, கலந்து கொண்ட அனைவருக்கும் ஒரு நல்ல அனுபவமாக அமைந்தது.



"நான் ஒருபோதும் எதையும் அவமானகரமாகக் கருதியதில்லை. ஏனெனில் வாழ்க்கை என்பது அந்தந்த நேரத்து நியாயம்."

"அற்பத்தனங்களை அகங்காரத்தால் எதிர்கொள்கிறேன்."

"வளைந்தே பழக்கப்பட்ட ஒரு சமூகத்தில், சராசரியாக நேராய் நடப்பவர்களே திமிர் பிடித்தவர்களாகத் தெரிகிறார்கள்."

**ஜெயகாந்தன்**

# டென்னசி தமிழ்ச் சங்கம்



இந்த ஆண்டு எங்கள் தமிழ்ச் சங்கத்தின் சித்திரைத் திருவிழா நிகழ்வு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அந்தப் பெருவிழா நாளன்று அரங்கின் நுழைவாயில் முதல் விருந்து நடைபெறும் இடம் வரை, வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, விழா மேடை, பழங்கள், பூக்கள் மற்றும் பனைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலானவர்கள் பாரம்பரியத் தமிழ் உடையான புடவை மற்றும் வேட்டி அணிந்து வந்திருந்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக நடிகரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. நெப்போலியன் அவர்களும், தமிழ்த் திரையுலகின் முன்னணி நட்சத்திரமான திருமதி. குஷ்பூ சுந்தர் அவர்களும் வந்திருந்தது விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தது. வருடா வருடம், பண்டைத் தமிழ் கலை வடிவங்களுள் ஒன்றான, கோலமிடுதலைக் கொண்டாடும் வண்ணம், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்குக் கோலப்போட்டி நடத்துவதுண்டு. இந்த வருடமும் அது சிறப்பாக நடைபெற்றதுடன், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் வெற்றியாளர்களுக்கு, சிறப்பு விருந்தினர்கள், பரிசுகளை வழங்கினார்கள. அது மட்டுமின்றி, செயின்ட் லூயிஸின் ’தமிழ் நிகழ்கலைக் கழகம்’ அங்கத்தினர்கள் கலந்து கொண்டு, பாரம்பரியத் தமிழ்க் கலை வடிவங்களான கரகம், சிலம்பம், துடும்பாட்டம், கும்மி, பறை ஆகியவற்றை நிகழ்த்தினர். சென்ற ஆண்டைப் போலவே, உறுப்பினர்களும் நடனத்தில் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். நிறைவாக, வாழை இலையில் பல வகையான அறு சுவை உணவு வகைகள், விருந்தோம்பலுடன் பரிமாறப்பட, அனைவரும் வயிறும், உள்ளமும் நிறைந்து, மகிழ்வுடன் விடை பெற்றனர்.


Federation of Tamil Sangams North America &
Sacramento Tamil Mandrum
jointly presents
FeTNA
36th Convention
SAFE Credit Union Performing Arts Center, 1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
தொன்மை, தமிழரின் பெருமை
JEOPARDY!
in
TAMIL
QUIZ PROGRAM FOR THE "YOUTH"
FIRST 15 REGISTRATIONS ONLY ALLOWED
TO REGISTER : https://tinyurl.com/JeopardyInTamil
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தொன்மை, தமிழரின் பெருமை
சேர்ந்திசை
திரைப்பட இசையமைப்பாளர்
ஜேம்ஸ் வசந்தன்
அவர்களுடன் இணைந்து
நீங்களும் பாடலாம்...
To Register
To participate, please register at : https://tinyurl.com/47yc78cv
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW



# அகிலம் நீ !



**கவிஞர் இளமாறன் நாகலிங்கம்**
**(செலாமா, மலேசியா)**

வினைத்தூய்மை கல்விநலம் மீதேநீ, நாளும்
விழித்தேதான் கவனங்கொண்டுபடித்தல் வேண்டும்!
நினைப்பாலும் நெஞ்சாலும் திடமாக நிற்க
நீரோடும் வழித்தடமாய் புதுப்பாதை விட்டு
அனைத்தும்தான் சமநிலையாய் என்னென்றும் பற்றி
அன்பைத்தான் எல்லோர்க்கும் அளிக்கமனம் கொள்க!
இணையில்லாத் தமிழ்நெறிகள் கற்றேதான் என்றும்
எல்லையில்லாப் பொதுவாழ்வில் தொண்டாற்ற வேண்டும்!

பெரியவர்கள் சொல்கின்ற செய்தியினைக் கேட்டுப்
பொறுப்புடனே செயல்பட்டால் நமக்கென்றும் வெற்றி!
அறிந்தவர்கள் பகருவதைக் கருத்தினிலே வைத்தால்
அறிவார்ந்த செயல்பாட்டை முன்னெடுக்கத் தோன்றும்!
சிறியவர்கள் என்றெண்ணி யாரையுமே தாழ்த்திச்
சிறியாரைக் கேலிசெய்ய வேண்டாமே, என்றும்
தெரிந்தவர்கள் சொல்கின்ற கருத்துகளை, நன்கு
தெளிந்தேதான் பகுத்தாய்ந்தே உள்வாங்க வேண்டும்!

பண்புமிக்க புதியதொரு குமுகாயம் என்றும்
பகுத்தறிந்து செயலாற்ற புதுதெம்பு வேண்டும்!
அன்புமிக்க நல்லபல உறவுகளைச் சேர்த்தே
அன்பான பெண்ணினமே பணியாற்ற வேண்டும்!
தன்புனிதத் தாய்மொழியைத் தவறின்றிப் படித்துத்
தரணியுள்ளோர் வியந்திடவே தரம்உயர்த்தல் வேண்டும்!
அன்புமிக்கத் தமிழர்கள் நலமாக வாழ
அன்றாடம் ஒருவருக்கொ ருவர்உதவல் வேண்டும் !

மொழியறிந்த தலைமுறையாய் வாழ்ந்திடுதல் வேண்டும்
முன்னேறி சாதனைகள் புரிந்திடுதல் வேண்டும்
விழிமகளிர் புன்சிரிப்பை மதித்திடுதல் வேண்டும்
விரிவுலகில் மக்களினம் மகிழ்ந்திடுதல் வேண்டும்
பொழில்மிகுந்த வாழ்க்கையினைப் பூரித்தல் வேண்டும்
பூவானம் வரையில்தான் உயர்ந்திடுதல் வேண்டும்
எழில்மிகுந்த உலகத்தை மீட்டிடுதல் வேண்டும்
இப்படியோர் குமுகாயம் சமைத்திடுதல் வேண்டும் !

கவிஞர் பற்றிய சிறுகுறிப்பு: இளமாறன் நாகலிங்கம், மலேசியாவில் கணிணி பொறியியல் துறையில் பணிபுரிகிறார். மரபுக் கவிதை மற்றும் புதுக் கவிதை எழுதுவதில் வல்லவர். 2020ஆம் தொடங்கி மலேசிய தனியிசைப் பாடல்களுக்கு பாடலாசிரியராக இருக்கிறார். சிறந்த இளம் பாடலாசிரியர் என்னும் விருதும் பெற்றுள்ளார்.


# வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் தமிழ்ப் பணிகள்



**திரு. இராம்துரை பாலசுப்பிரமணியன்**

***வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின்(FETNA)*** அங்கமாகவுள்ள தமிழ்ச் சங்கங்கள் தமிழை வளர்க்க, நம் தாய்த்தமிழை அடுத்தத் தலைமுறையினருக்குக் கொண்டுச் செல்லப் பற்பல வழிகளைத் தத்தமது மாநிலத்தில் தொடர்ந்து பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அவற்றுள் சில, தமிழ் இலக்கியக் குழுக்கள், தமிழ்ப் பள்ளிகள், வாசகர் வட்டங்கள், தமிழ் நூலகங்கள், முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) கழகங்கள், தமிழ் அறிஞர்களைச் சிறப்பு விருந்தினராகத் தருவித்து வட அமெரிக்கத் தமிழ் ஆர்வலர்களை ஊக்குவித்தல், தமிழ்ப் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித் தொகை, விருதுகள் என அடுக்கிக்கொண்டே போகலாம். அது மட்டுமா! வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FETNA) குழுக்கள் முன்னெடுக்கும் அனைத்துத் தமிழ் சார்ந்த போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் தமது பங்களிப்பைச் சிறப்புறச் செய்து தமிழைப் போற்றுகின்றன என்றால் மிகையல்ல.

***அனைவரும் தமிழில் வாசிப்போம்!*** என்ற



குறிக்கோளோடு பல தமிழ்ச் சங்கங்கள் தமிழ் வாசகர் வட்டங்களை நிறுவிச் செயல்படுத்தி வருகின்றது. தமிழ் இலக்கியம், வாழ்வியல் மற்றும் கருத்தியல் போக்குகளை விவாதிக்கும் தளமாக இந்த வாசகர் வட்டங்கள் திகழ்ந்து வருகின்றது. ஒரு சில வாசகர் வட்டங்களில் மாதம் ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து அதை உறுப்பினர்களோடும், தமிழ் ஆர்வலர்களோடும் விவாதிப்பது தனிச் சிறப்பு வாய்ந்தது.

பெரும்பாலான தமிழ்ச் சங்கங்கள் அவர்கள் மாநிலத்தில் / நகரத்தில் வாழும் நம் தமிழ்ச் சமூகத்தின் அடுத்தத் தலைமுறையினருக்குத் தமிழைக் கொண்டு செல்லத் ***தமிழ்ப் பள்ளிகளை*** நிறுவித் தமிழ் ஆர்வம் கொண்ட தன்னார்வலர்களின் உதவியோடு




தமிழ் மொழியை மாணாக்கர்களுக்குக் கற்பித்து அவர்களின் தாய் மொழியின் பெருமையை உணரச் செய்து மிகப்பெரிய அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

பல வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்கள் தமிழ்ப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் ஒன்றாகத் தத்தம் மாநிலத்தின் தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்ப் பயின்று இரு மொழி முத்திரை ***(Seal of Biliteracy in Tamil)*** தேர்வில் தேர்ச்சிப் பெற்ற




மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் மற்றும் உதவித்தொகையும் (scholarship) வழங்கிக் கௌரவிக்கின்றது.

தமிழ்ப் பள்ளிகளில் **நூலகம்** மட்டுமல்லாது, தமது பகுதிகளில் உள்ள பொது நூலகங்களிலும் நூற்றுக்கணக்கான **தமிழ்ப் புத்தகங்களை** நம் தமிழ் மக்களுக்காகத் தன்னார்வலர்களின் உதவியுடன் அன்பளிப்பாக வழங்கித் தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழுக்கும் சிறப்பு சேர்ப்பது தன்னிகரற்றது.

ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும், தம் மக்களிடையே தமிழ் வாசிப்புத் தொடரவும், தங்கள் பகுதிகளில், வட்டாரங்களில் நிகழும் முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து அவர்களிடம் கொண்டு செல்லவும், ஆர்வமுடைய வளரும் எழுத்தாளர்களை






ஊக்குவிக்கவும், மாத இதழ்கள், **காலாண்டு இதழ்களைத்** (பெரும்பாலும்) தத்தம் இணையதளத்தில் பிரசுரம் செய்வது மட்டும்மல்லாமல் புத்தக வடிவிலும் அச்சடித்துத் தமிழ்ச் சங்க உறுப்பினங்களின் வீடுகளுக்கே அஞ்சல் செய்வது சிறப்பு வாய்ந்தது.

தமிழ்ச் சங்கங்கள் தமிழ் ஆர்வத்தை நிலைக்கச் செய்ய **முத்தமிழ்க் கழகங்கள்** மற்றும் **இலக்கியக் குழுக்களை** அமைத்து அவ்வப்போது பெரியவர்களும், மாணவர்களும் பங்குப் பெறத் தமிழ் அறிஞர்களோடு இனிய இலக்கிய மாலைகள், பேச்சாளர்கள் குழு மூலம் பேச்சுப் போட்டிகளை நடத்துதல், எழுத்துப்பட்டறைகளின் படைப்புகளைப் பகிர்தல், தமிழரின் வாழ்வியல் மற்றும் சரித்திர நாடகங்களை அரங்கேற்றுதல், தமிழ் இசை நிகழ்ச்சிகள் எனப் பற்பலப் போட்டிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நம் வாழ்வோடு இணைத்துக் கொண்டு செல்ல ஊக்குவிப்பது மட்டுமல்லாது அதற்கு அடித்தளமும் அமைத்துக் கொடுப்பது சிறப்பு.






அது மட்டுமா! தமிழ்ப் பாரம்பரியக் கலைகளான போர்ப்பறை, **தற்காப்புக் கலைகளான** சிலம்பாட்டம், அடிமுறை, மற்றும் பொய்க்கால் குதிரை, கரகாட்டம், ஒயிலாட்டம், கபடி விளையாட்டு எனப் பல பாரம்பரியக் கலைகளை அமெரிக்க வாழ்த் தமிழ் மக்களுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதில் தமிழ்ச் சங்கங்களின் பங்கு அலாதியானது.!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்ச் சங்கங்களும் நம் தாய்த்தமிழ் வளர்க்கப் பல எண்ணிலடங்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றால் அது மிகையல்ல. வட அமெரிக்காவில் வாழும் தமிழ்ச் சொந்தங்களிடமும், இளைய தலைமுறையினருடனும் தமிழைக் கொண்டு செல்ல, நல்ல வாசகர்களாக உருவாக்க அனைத்துத் தமிழ்ச் சங்கங்களும், தன்னார்வர்களும் பற்பல முன்னெடுப்புகளைச் செய்து தமிழுக்குப் பெருமை சேர்க்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

# மத்திய இல்லினாய் தமிழ்ச் சங்கம்



மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் சித்திரை புத்தாண்டு விழா வெகு விமரிசையாக ஏப்ரல் 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. குத்து விளக்கேற்றி,தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கலந்து கொண்டு எங்களுடன் விழா கொண்டாடியது மிகச் சிறப்பு. பல போட்டிகளில் சிறுவர்கள் கலந்து கொண்டு தாங்களும் மகிழ்ந்து அனைவரையும் மகிழ்வித்தார்கள். ‘புதுமுகம் அறிமுகம்’ என்ற நிகழ்வு பலரின் மலரும் நினைவுகளைத் தூண்டியது. பெண்டிர் குழுவின் குதூகலமான ‘ஆடலுடன் பாடல்’ என்ற நிகழ்வு காண்போரை சிரிக்க வைத்தது. இறுதியில் ஆடவர், பெண்டிர் கூட்டம் பின்னிசையுடன் பல பாடல்களைப் பாடி வந்தோரை மகிழ்வித்தனர். சுவையான உணவக உணவு பரிமாறபட்டது.



## மூங்கில் அரிசி

**மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி, அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். அது, மூங்கில் அரிசி எனப்படும்.**



**கத்திரிக்கோல்** **என்பது சங்க இலக்கியத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது "மயிர் குறை கருவி" – பொருநராற்றுப் படை – 261**

# சின்சினாட்டி மாநகர தமிழ்ச் சங்கம்



கடந்த மூன்று ஆண்டுகளாகப் பொங்கல் விழா கோவிட் 19 காரணமாக மெய்நிகர் நிகழ்வாக வலையொளியில் நடத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு மீண்டும் பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் ஒரு உள் அரங்க விழாவாக, பிப்ரவரி 26, 2023 காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

கொண்டாட்டத்தின் போது வாழை இலை விருந்து 5 பந்திகளாக பரிமாற்றப்பட்டது. 500 விருந்தினர்கள் கலந்து கொண்டு பல்வேறு சுவையான சைவம் மற்றும் அசைவ உணவு வகைகளை சாப்பிட்டுக் கொண்டே நடைபெற்ற இசை நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்தனர்.

தமிழ்ப் பள்ளி மாணவர்கள் பொங்கல் விழாவைத் தமிழ்பள்ளியில் தை மாதம் முதல் வாரத்திலேயே கொண்டாடி மகிழ்ந்தனர். அவர்கள் அனைவருக்கும் சுவையான சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நடந்த திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் எங்கள் தமிழ்ப் பள்ளியைச் சார்ந்த 70-க்கும் மேலான குழந்தைகள் மிக ஆர்வமுடன் பங்கேற்று பரிசுகள் வென்றனர். இந்த ஆண்டு சிறுவர் சிறுமிகளுக்கானப் பேச்சுப் போட்டி 2023 மார்ச் மாதம் கடைசி வாரத்தில் நடத்தப்பட்டது. ஏறக்குறைய 80க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். சித்திரை கொண்டாட்டம் - 2023 வெகு விமர்சியாக ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரை ஏறக்குறைய 550 க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்ட மாபெரும் விழாவாக அமைந்தது.

தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் மிக நேர்த்தியாக தொழில் முறை கலைஞர் களின் நிகழ்ச்சி களுக்கு இணையாக அமையப்பெற்றது. விழா சுவையான இரவு விருந்துடன் நிறைவு பெற்றது.

சித்திரை கொண்டாட்டத்தின் போது பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமிகள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டனர்.

தமிழ்ச் சங்க நிறுவன குழுவில் ஒருவரும், செயல் திறனும், ஈடுபாடும் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினரான திரு குமார் சரவணன் அவர்கள் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுப் பணியை நிறைவு செய்தார். திரு. குமார் அவர்களின் பணி வெகுவாகப் பாராட்டப்பட்டது. தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவில் புதிய உறுப்பினராக திருமிகு. பிருந்தா கலையரசன் அவர்கள் இணைந்துள்ளார்கள்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை -2023 விழா போட்டிகளில் கலந்து கொண்டு திருமிகு ரஜினி ஜெயப்பிரகாஷ் அவர்கள் கவிதைப் போட்டியிலும், சிறுமி தன்விகா பூபதி கதை சொல்லும் போட்டியின் தகுதி சுற்றிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் பங்கு பெறத் தகுதி பெற்றுள்ளார்கள்.

வலைதளம்: *cincytamilsangam.org*
வலையொளி: *youtube.com/@GreaterCincinnatiTamilSangam*

# ஒக்லஹோமா தமிழ்ச் சங்கம்



கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் ஒக்லஹோமா தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டம் இனிதே நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் நூற்று ஐம்பது பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்பித்தது. பின்னர் சிலர் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும் தமிழ்ப் புத்தாண்டின் சிறப்பைப் பற்றியும் உரையாடினார். அடுத்ததாக, பெரியவர் மற்றும் சிறுவர்களுக்குப் பட அகராதி, சுவாரசியமான பொது அறிவு மற்றும் ஏலப்போர் ஆகிய விளையாட்டுகள் மிகவும் ஆரவாரத்துடன் நடைபெற்றது. அதன்பிறகு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கானத் தமிழ் பாரம்பரிய ஆடை அணிவகுப்பு வண்ணமயமாக நடைபெற்றது. அடுத்து தென்னிந்திய உணவு வகைகளுடன் மிகச் சுவையான இரவு விருந்துடன் நிகழ்ச்சி சிறப்பாக முடிவடைந்தது.



பூ உண்டு. ஆனால், கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர் எது ?

ஆலமலர், பலா மலர்.

# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்



சித்திரைத் திருவிழா என்பது மதுரை மீனாட்சி அம்மைக்கு ஊர் கூடி கொண்டாடும் விழா தானே! மீனாட்சி மதுரையில் மட்டும் தானா!! ஒவ்வொரு வீட்டிலும் உள்ள அனைத்துப் பெண்மணிகளும் மீனாட்சி தானே, அவர்களனைவரையும் கொண்டாடுவதும், பெருமையுறச் செய்வதும் நம் கடமையன்றோ. இதை மனதில் இருத்திக் கொண்டு வாசிங்டன் தமிழ்ச் சங்கம் சித்திரை திருவிழாவிற்கு வந்திருந்த அன்னையர் அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கியும், வாழையிலையில் அறுசுவை உணவிட்டும் பெருமைப் படுத்தியது. சித்திரைத் திருநாளோடு அன்னை யர் நாளும் கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, திருக்குறள் மறையோதல் தொடர்ந்து, பல ஆடல் பாடல்களுடன் கூடிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் முத்தாய்ப்பாகப் பல நிகழ்ச்சிகள் இருந்தாலும், அனைவரின் கவனத்தைக் கவர்ந்து சிந்தையை மகிழ்வித்தது குழந்தைகளின் சங்க இலக்கியப் பாடல் நிகழ்ச்சி- யாழ், மங்கையரின் பொன்னியின் செல்வன் அலங்கார அணிவகுப்பு, கம்பன் காட்சிகள், மற்றும் தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளின் திருக்குறள் இசை நிகழ்ச்சி முதலியன ஆகும்.

சிறப்பு நிகழ்ச்சி இல்லாமல் சித்திரை விழாவா? திரையிசை இயக்குநர் ஜேம்ஸ் வசந்தனின் தமிழோடு விளையாடு என்ற 40-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற நிகழ்ச்சி இரண்டு மணிநேரம் போனதே தெரியாமல் சிறப்பாக நடைபெற்றது. ஐனூறுக்கும் மேற்பட்டோர் வந்திருக்க, முதன் முறையாக எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்தளித்து வழங்கியது தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளே!!. ஒன்பது வகை தானியங்களை விதைத்து முளைப்பாரி சுமந்து பறையிசையோடு சங்கத்தின் பாவையர் ஊர்வலம் வந்து மேடையில் பறையிசைக்குக் கும்மியாட்டம் ஆடியது ஒரு கண்கொள்ளாக் காட்சி! இறுதி நிகழ்ச்சியாக, திரையிசைப் பாடல்களை அதன் இராகம் மற்றும் தமிழ்ப் பண் குறிப்பிட்டு உள்ளூர்ப் பாடகர்கள் பாடினார்கள். நிகழ்ச்சியின் நிறைவில், கட்டுச்சோறுடன் மகிழ்ச்சியாக வீடு திரும்பினர் சங்க உறுப்பினர்கள்.

# கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்






வயது அதிகரிக்க அதிகரிக்க அதை வெளியில் சொல்ல பலரும் தயங்குவர். ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக வெற்றிகரமாக 25 ஆண்டு கடந்து கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் வெற்றிநடை போடுகிறது என்று சொல்வதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். கடந்த ஐந்து மாதத்தில் மூன்று பெரிய நிகழ்ச்சிகளை நடத்தி முடித்துள்ளது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம். முதலாவது, பிப்ரவரி மாதம் நடந்த கொலம்பஸ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் "கொஞ்சம் நடிங்க பாஸ்" புகழ் ஆதவன் கலந்து கொண்டு சிறப்பித்த தமிழர் திருநாள் கொண்டாட்டம் என்ற நிகழ்ச்சி. இரண்டாவது, ஏப்ரல் மாதம் நடந்த வெள்ளி விழா மெகா கொண்டாட்டம் என்ற நிகழ்ச்சி. காலை நிகழ்ச்சிகளை கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் நிறுவனர்கள், ஓஹியோ செனேட்டர் மற்றும் நடிகர் நெப்போலின் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மதியம் பாரம்பரிய வாழை இலை விருந்தும், மாலை அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த அலெக்ஸ்பிரியன்ஸ் நிகழ்ச்சியும் நடந்தது. காலை முதல் இரவு வரை குறைந்தது 700 பேருக்கு மேல் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தின் காலாண்டு மின்னிதழான "சாரல் இதழ்" முதல் முதலாக அச்சிடப்பட்டு நடிகர் நெப்போலியன் மற்றும் ஓஹியோ செனேட்டரால் வெளியிடப்பட்டது. ஏப்ரல் கொண்டாட்டம் முடிந்து மே மாதத்தில் பட்டிமன்றம் புகழ் ராஜா மற்றும் பாரதி பாஸ்கர் கலந்து கொண்ட பட்டிமன்றம் நடைபெற்றது. திரு. ராஜா நடுவராகவும், திருமதி, பாரதி பாஸ்கருடன் ஏழு கொலம்பஸ் பேச்சாளர்கள் கலந்துகொண்டு அரங்கம் அதிரும் பேச்சால் அனைவரையும் கட்டிப் போட்டனர். பிப்ரவரி தொடங்கி மே வரை அடுத்தடுத்து நிகழ்ச்சிகளைக் கொடுத்து கொலம்பஸ் தமிழ் மக்களை மகிழ்வித்து வருகிறது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்.



## பாரதிதாசன் கவிதைகள்

தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்
தமிழ்க்கவி என்று எனை அவளும் காதலித்தாள்!
அமுது என்று சொல்லும் இந்தத் தமிழ் என் ஆவி
அழிவதற்குக் காரணமாய் இருந்தது என்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?
உமை ஒன்று வேண்டுகின்றேன். மாசில்லாத
உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள்!

(பாரதிதாசன் கவிதைகள், புரட்சிக்கவி,பாடல் 33)



# சுரபியின் கீழடி



சில்லென்று கால்களில் நீர் பட்டதும், பத்தடி தூரத்து சிற்றருவியின் தூறலும் பட, உடம்பெல்லாம் சிலிர்க்க சந்தோசத்தில் கத்தினாள் சுரபி.

“அப்பா „ டன்ஸ் அண்ட் டன்ஸ் ஆப் வாட்டர்"

நான் ‘தமிழ், தமிழ்’ என்றேன். சிரித்தாள் நாக்கைக் கடித்தபடி.

விடுமுறைக்கு வந்த இந்த இருபது நாட்களாகவே நானும் பார்க்கிறேன் எல்லாவற்றையுமே அதிசயமாய்ப் பார்க்கிறாள், நூறு கேள்விகள் கேட்கிறாள். என் அம்மாவும் அப்பாவும் குழந்தைகளாகவே மாறி இவள் பின்னாலேயே ஓடுகிறார்கள்.

அமெரிக்காவில் பிறந்து எட்டு வருடங்களுக்குப் பிறகு முதல் முறை நம் மண்ணை மிதிக்கிறாள் சுரபி! எங்களது விசா,வேலை என இங்கு வர முடியவில்லை.

‘தாத்தா,இதென்ன?’

‘வெத்தலப் பொட்டி பாப்பா’

‘பாப்பா, கேணி பக்கம் போகாதே’

‘கேணினா ?’

‘தாயீ, அங்கன உலக்கு இருக்குது பாரு, எடுத்தா‘

‘உலக்குன்னா?

‘ஆறு மணியாகிப் போச்சு, மாட விளக்கு ஏத்தாம இருக்காக பாரு’

‘மாடவிளக்குன்னா?’

‘கணேசா,, திருகை வீணாக் கிடக்கு, டவுனுக்கு எப்ப போற?

‘திருகைன்னா? டவுனுன்னா?’

‘ஆத்தா, தாத்தா குறிச்சில இருக்காகளா பாரு, இந்த காப்பித் தண்ணிய குடுத்திரு ஆத்தா’

‘குறிச்சின்னா ?

- இது‘ ஃகாபி ஆர் வாட்டர்? காப்பித் தண்ணி சொல்றாங்க!’ என என் காதில் ரகசியமாய்.

‘பாட்டி, ஹெவியா இல்லையா?’ என காதின் தண்டட்டியை ஆட்டிப் பார்த்து கவலைப் பட்டு கேட்டது,

என் அப்பா வெற்றிலை போட்டுத் துப்ப, கணேசனிடம் ‘டேய், அந்த பணிக்கத்தை இட்டா?’ எனும் போது,

‘பணிக்கம்ன்னா?’

நான் அவசரத்தில் வீட்டின் உள்ளே நுழைகையில், என் அம்மா,



‘அதான் கிண்டி வச்சுருக் கோம்லப்பா, கால் கழுவிட்டு வா’ எனக் கூறுகையில்,

‘கிண்டின்னா?‘

பாட்டியின் விதவிதமான கிராமத்துக் கதைகளைக் கேட்டு உறங்கிய மகளை, தூக்க வருகையில் ‘இங்கயே தடுக்குப் போடு, தூங்கட்டும். அங்கன பெரிய தடுக்கு இருக்கு பாரு’ எனக் கூற, தூக்கத்திலேயே

‘தடுக்குன்னா?’

இப்படி அத்தனையையும் கேள்வியால் கேட்டும், ரசித்தும், கேலியாகச் சிரித்தும் இவள் அனுபவிப்பது, இவளது எட்டு வயது வாழ்க்கையில் மிகப் புதிது. நானும் என் மனைவியும் அகமகிழ்ந்தோம்!

இப்போது சுரபிக்கு எங்கள் வீட்டு பண்ட பாத்திரங்கள், உணவுவகைகள், உறவுமுறைகள் என சகலமும் அத்துப்படி!

அம்மா தன் பழைய நகைகளைப் போட்டு, ‘எங் கொலதெய்வம்! அட்டிக எம்புட்டு அம்சமா இருக்கு பாரு!’ என அழகு பார்த்த போது, நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட அட்டிகையில் சுரபி உண்மையிலேயே அம்சமாய் இருந்தாள்!

அங்கேயும் இவள் கேள்வி- ‘அட்டிகன்னா?‘

என் வீடே அவளுக்கு ‘கீழடி’ போல இருந்தது!

ஊருக்கு கிளம்பும் நாள் வந்தது, எல்லோரும் அழுது அழுது கண்கள் வீங்கிக்கிடந்தன. என் துக்கமே பெருந்துக்கமாக இருக்க,

சுரபி கேட்டாலே சில கேள்விகள்!-

‘அப்பா போணுமாப்பா?’

‘ஆமா கண்ணா, அங்க வீடு இருக்குல்ல?”

‘அங்க வீடு மட்டும் தானேப்பா இருக்கு. எல்லாரும் இங்க இருக்காங்கப்பா!’

என்னிடம் பதில் இல்லை!




ஷீலா ரமணன்

# நினைவில் நின்றவர்கள்



## திரு. கருமுத்து தி. கண்ணன்

மதுரை தியாகராசர் கலைக்கல்லூரி, தியாகராசர் பொறியியல் கல்லூரி மற்றும் தியாகராசர் மேலாண்மைக் கல்லூரி மற்றும் பல கல்வி நிறுவனங்களின் தாளாளராகவும் நிர்வாகியாகவும் செயல்பட்டு வந்த கருமுத்து தி. கண்ணன் அவர்கள் மே 23, 2023 அன்று மறைந்த செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது. இவர் மதுரையைச் சார்ந்த தொழிலதிபரும், கல்வித்துறை முன்னோடியுமாவார். மதுரையில் தியாகராஜ தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கலைக்கல்லூரி ஆகியவற்றை நிறுவிய கருமுத்து தியாகராஜர் மற்றும் இராதா தம்பதியரின் ஒரே மகனாவார். பல நூற்பாலைகளின் தலைவராகவும் இருந்தார். மதுரை நகர மேம்பாட்டிற்கு பல திட்டங்களைச் செயல்படுத்தியவர். சிறந்த தமிழ்ப் பணியும் கல்விப்பணியும் புரிந்து வந்த இவரின் மறைவு தமிழ் சமுதாயத்தில் ஒரு பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது என்பதில் ஐயமில்லை.



## மருத்துவர் திரு.சுப்ரமணியம் பழனிசாமி

அமெரிக்காவின் முன்னோடித் தன்னார்வலர், தமிழ் பற்றாளர் மற்றும் தமிழ்நாடு அறக்கட்டளையின் மேனாள் தலைவர் ஆவார். அவரது சமூகப் பணிகள் போற்றத்தக்கது. அவரின் மறைவு தமிழ் சமூகத்திற்கு மிகப் பெரிய இழப்பாகும்.

# கவிதை எல்லாம் செய்யும்



கனமற்ற காகிதமொன்று
கண்ணீரால் கரைய வைக்கும்
மாயக் கரமாய் ஆற்றுப்படுத்தும்
உணர்வுகள் ஊற்றி வரைந்த
ஒற்றைக் கவிதையால்

இலகுவான மனம் ஒன்று
இரும்பாய்க் கனக்கும்
காலங்கள் மறக்கும்
உயிரினை உருக்கும்
ஒற்றைப் பார்வையால்

இன்பப் பயணம் ஒன்று
சுவையற்றுப் போகும்
சுமையாய் மாறும்
நேசமில்லா நட்புடன்
கரம் கோர்த்துச் செல்கையில்



கவிஞர்
இரம்யா ரவீந்திரன்

மனதை ஆற்றுப்படுத்தவும்
உறுதியாய் சமைக்கவும்
பேசா வார்த்தைகளால்
தொடுதல் வேண்டா உணர்வால்
முடியுமென்றால்
புறக்கணிப்பையும்
புதிய கசப்புகளையும்
பரிசளிக்கும் மனிதர்களிடம்
அலங்கார வார்த்தைகள்
வீசிக் கடக்கின்றேன்
வானக் கூரையில் மின்னும்
எண்ணிலடங்கா நட்சத்திரங்களாய்
அவர்தம் வாசலை அலங்கரிக்கும்
பயனில்லா வார்த்தைக் குப்பைகள்

எஞ்சிய வார்த்தைகள் போதும்
காலம் தாண்டி வாழும்
கவிதைகள் நெய்ய
உணர்வுகள் ஊற்றி
மௌனத்தில் ஆழ்ந்து
சொல்லோவியம் வரைகின்றேன்
இக்கவிதைகளிடம்
எச்சரிக்கையாயிருங்கள்
விவரிக்க முடியாத மகிழ்ச்சியையோ
தாள முடியாத துயரத்தையோ
நொடியில் கடத்தக் கூடும்
கொஞ்சும் தமிழும்
கொஞ்சம் கவிதையும் போதும்
அவ்வப்போது நானும் கடவுளாக



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிஃபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
Register NOW
பத்ம பூஷன், சங்கீத கலாநிதி
சுதா ரகுநாதன்
வ·ழ·ங்·கு·ம்
தமிழிசை
சவுமியா ஜெ.நாராயணன்
- கடம் -
கமலகிரண் விஞ்சாமுரி
- வயலின் -
அக்ஷய் அனந்தபத்மநாபன்
- மிருதங்கம் -
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/



SINCE 1988
SACRAMENTO TAMIL MANDRAM
CELEBRATING 25 YEAR
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தமிழ் ஆய்வரங்கம்
எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன்
முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன்
முனைவர் பர்வீன் சுல்தானா
தொல்பொருள் ஆய்வாளர் கி.அமர்நாத் ராமகிருஷ்ணா
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

# நியூ இங்கிலாந்து தமிழ்ச் சங்கம்













நியூ இங்கிலாந்து தமிழ்ச் சங்கத்தின் சித்திரை விழா 2023, நாட்டுப்புற பாடல், நாட்டுப்புற நடனம், விவாத மேடை (நீயா நானா) போன்ற தமிழ் கலை வடிவங்களில் கவனம் செலுத்தியது, மேலும் நாங்கள் அன்னையின் அன்பைப் பற்றிய படத்தொகுப்பினை செய்து காட்சிக்கு வைத்திருந்தோம்.

பல தலைமுறையினருக்குத் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் கற்பித்த தற்காகத் தமிழாசிரியர்கள் திருமதி நிர்மலா மோகன்குமார், திரு. பிரபாகர் கோதண்டராமன் ஆகியோரைத் தமிழ்ச் சங்கம், அனைத்து தமிழ் சமூகத்தின் சார்பாக மனதார பாராட்டி கௌரவித்தது.

தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் பல தலைமுறைகளுக்குச் எடுத்துச் சென்ற சிசு பாரதி பள்ளி, ஆக்ட்டான் தமிழ்ப் பள்ளி, கலைமகள் தமிழ்ப் பள்ளி ஆகிய பள்ளிகளில் அனைத்துத் தன்னார்வப் பணியாளர்களைத் தமிழ்ச் சங்கம் பாராட்டி மகிழ்வித்தது.

இவ்விழாவில், சிறப்பு விருந்தினர்களாகத் திருமதி. ஈஸ்வர்யா பிரபாகர் மற்றும் சூப்பர் சிங்கர் ஜெசிகா ஜூட் ஆகியோர் கலந்துகொண்டனார். எமது பகுதியில் உள்ள சிறுவர்கள், தமிழ்க் கலை வடிவங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் திருமதி. ஈஸ்வர்யா பிரபாகர் நாட்டுப்புற நடனத்தை நிகழ்த்தினார்.

திருமிகு ஜெசிகா ஜூட், திறமையான உள்ளூர் பாடகர்களுடன் இணைந்து சிறப்பான கரோக்கி இசை நிகழ்ச்சியினை வழங்கினார். இது பார்வையாளர்களை மகிழ்வித்ததோடு திறமையான உள்ளூர் பாடகர்களை அடையாளம் காட்ட உதவியது.

திரு.வெங்கட் மற்றும் திருமதி சீதா ராஜ் ஆகியோர் ஆகியோர் இணைந்து ஒரு விவாத நிகழ்ச்சியை நடத்தினார்கள். நகைச்சுவையாகவும், அதே நேரத்தில் பலப் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் இந்த நிகழ்ச்சியின் வழி கிட்டியது. எதிர்காலத்தில் இந்நிகழ்வில் பங்கேற்க பார்வையாளர்களையும் இது ஊக்குவித்தது.

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம்

சமீபத்திய நிகழ்வு அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தின் தொடர் பயணத்தில் மேலும் ஒரு புதிய மைல்கல் !

அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தினைச் சார்ந்த மேரிலாந்து மாநிலத்தில் அமைந்திருக்கும் *Maryland Tamil Academy, Inc.* மாணாக்கர்கள் *Seal of biliteracy award* என்னும் இருமொழி முத்திரை (உயர்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு ஆங்கிலம் தவிர்த்து பிறமொழியின் கற்றறிவுத் திறன் தேர்ச்சிக்கான விருது ) சாதித்துள்ளனர்.

**மாணாக்கர்களின் பெயர்கள்:**

1. *Nithilah S Ayyappan, Poolesville High School, Montgomery County Public Schools, Maryland.*
2. *Mahita Kamalahasan, Poolesville High School, Montgomery County Public Schools, Maryland.*
3. *Swetha Sridharan, Poolesville High School, Montgomery County Public Schools, Maryland.*
4. *Aishwarya Ponraj, Northwest High School, Montgomery County Public Schools, Maryland.*

அ.த,க. எதிர்வரும் கல்வி ஆண்டிற்கானப் பாடநூல்களை உருவாக்கும் பணியில் மிகவும் முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பாடநூல்களை உலகத் தரத்திற்கு உயர்த்தும் அரும்பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டு ”ஆசிரியர் கையேடு ” அச்சு வடிவ நூலினை ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது. ஆறாம் நிலைக்கான நூல் புத்தம் புதுப் பாடங்களுடன் புத்தம்புது வடிவில் வடிவமைக்கப்படுகிறது. இந்த ஆண்டில் அ.த.கவின் சின்னம் அடிப்படையில் புதிதாக வடிவமைக்கப்படுகிறது. அ.த,கவிற்கு எனப் புதிதாகத் தனி அடையாளம்(*branding*) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டின் அ.த.கவின் செயற்குழு உறுப்பினர்கள் நேரடிக் கூட்டம் எதிர்வரும் செப்டம்பர்,2023 மாதத்தில் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள டல்லாஸ் பெருநகரில் நிகழ்த்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதில் சில அ.த.க.வின் அடுத்தக் கட்ட வளர்ச்சிக்கானத் திட்டங்களும் வரையறைகளும் வகுக்கப்பட இருக்கிறது.

எதிர்வரும் ஜூலையில் கலிஃபோர்னியா மாநிலத்தில் நிகழ இருக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையில் வழமைபோல் அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தின் சார்பில் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.



**வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்**
**சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்;**
**ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்.**
**ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?**
**பேதம் வளர்க்கப் பெரும்பெரும்பு ராணங்கள்!**
**சாதிச்சண்டை வளர்க்கத் தக்க இதி காசங்கள்!**
**கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்**
**கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்,**
**தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு**
**வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.**

பாரதிதாசன் எழுதிய சஞ்சீவி பார்வதத்தின் சாரல், வரிகள் 143–153

# ஒட்டாவா தமிழ் ஒன்றியம்




சிறிலங்காவினால் மேற்கொள்ளப்படும் தமிழின அழிப்பு உலகறிந்தது. ஒவ்வொரு ஆண்டும் மே 18 அன்று, தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வில் நீதிக்காக உறுதி கொள்வதும், தமிழின அழிப்பில் இழந்தோரை நினைவு கூர்வதும் வழக்கம். கனடாவில், கடந்த 2022 வருடம், தமிழின அழிப்பு நினைவு நாள் மற்றும் சிறிலங்காவில் தமிழருக்கு நடந்தது தமிழின அழிப்பு என கனடா பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப் பட்டது. மேலும் ஒன்டாரியோவில் தமிழின அழிப்பு கல்வி வாரம் 2021 முதல் சட்டமாகவும் உள்ளது. மே 18, 2023 அன்று ஒட்டாவா தமிழ் ஒன்றியத்தினால், பாராளுமன்ற செய்தி அரங்கில், கனடா தமிழ் அமைப்புகள் சார்பாக அறிக்கை வழங்கப்பட்டது. அன்று இரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்த, பல ஒட்டாவா தமிழ் அமைப்புகள் இணைந்த, தமிழின அழிப்பு நினைவு நாள் நிகழ்வுகளும் நடந்தது. இந்த வருடம் கனடிய பிரதமர் கனடா அரசின் முதல் தமிழின அழிப்பு நினைவு நாள் அறிக்கையை வெளியிட்டார். ஒட்டாவா தமிழ் ஒன்றியம் 2014 இல் ஆரம்பித்ததிலிருந்து தமிழ் மரபு - தமிழ் மரபுத்திங்கள் மற்றும் தமிழீழத்தில் தமிழின அழிப்புக்கான நீதி எனும் இரு தளங்களில் செயல்திட்டங்களை வகுத்து கனேடிய மற்றும் தமிழ் விழுமியங்களை தாங்கி சமூக அமைப்பாக இயங்கி வருகிறது.

*https://ottawatamilassociation.ca/news/press-releases/tamil-genocide-remembrance-day-2023-2/*

# சார்லட் தமிழ்ச் சங்கம்







ஏப்ரல் 22, 2023 அன்று சார்லட் தமிழ்ச் சங்கம் ரியாக்சன் குழுவுடன் இணைந்து உயில் மற்றும் அறக்கட்டளை அமைத்தல், அமெரிக்க குழந்தைகள் பாதுகாப்பு மையம் குறித்த தகவல்கள் மற்றும் அவசர காலங்களில் உதவி பெற யாரை அணுகுவது போன்ற பல தலைப்புகளில் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள் .இந் நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் மற்றும் ரியாக்சன் குழுவில் இருந்து தன்னார்வலர்கள் இணைந்து உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விரிவாக விடையளித்தனர்.

சார்லட் தமிழ்ச் சங்கத்தின் சித்திரைத் திருவிழா மே 14, 2023 ஞாயிற்றுக்கிழமை, அன்னையர் நாளன்று அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பாரம்பரிய நிகழ்ச்சிகளான பரதம், ஒயிலாட்டம், சிலம்பம் ஆகியவை இடம்பெற்றன. சார்லட் தமிழ்ச் சங்கத்தின் "வானம்பாடி" இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் இந்த விழாவில் அரங்கேறியது கூடுதல் சிறப்பாக அமைந்தது.

விழாவில் 1200 சார்லட் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு 20 வகையான உணவு வகைகள் கொண்ட சுவையான வாழையிலை விருந்து பரிமாறப்பட்டது. 150 தன்னார்வலர்கள் இணைந்து பணியாற்றி சுவையான முறையில் உணவினை தயாரித்து வந்திருந்த விருந்தினர்களை அருமையாக உபசரித்தனர்.

அறுசுவை உணவிற்குப் பின் செவிக்கு உணவளிக்கும் விதமாக பட்டிமன்ற நிகழ்ச்சி அரங்கேறியது. 'சன் டிவி புகழ்' திரு ராஜா தலைமையில், திருமதி பாரதி பாஸ்கர் மற்றும் சார்லட் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் மற்றும் இளையோர் பங்கேற்ற பட்டிமன்றம் பலரின் பாராட்டைப் பெற்றது. அறுசுவை உணவோடு நகைச்சுவையும், தமிழின் பொருட் சுவையும் இணைந்து எண்சுவையாய்த் தித்தித்தது.

சிறுவர்களுக்கான ஓவியப் போட்டி மற்றும் பெரியோர்களுக்கானக் காய்கறி மற்றும் பழங்கள் செதுக்கும் போட்டி ஆகியன நடை பெற்றன. இப்போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.கலைநிகழ்ச்சிகளுக்கான முன் பதிவு, தகவல் தொடர்பு என இந்த நிகழ்ச்சியில் இளையோர்களும் பெருமளவில் பங்கேற்றது சிறப்பாக இருந்தது.

தமிழால் இணைந்த சார்லட் தமிழ்ச் சொந்தங்கள் அனைவரின் நெஞ்சிலும் இந்த நிகழ்வு மகிழ்வானதொரு தருணமாக உறைந்திருக்கும் என்றால் அது மிகையில்லை.

மே மாத இறுதியில், சார்லட் இலக்கிய வட்டம், எழுத்தாளர் திருமதி சிவசங்கரி அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, சிறப்பாக நடத்தியது. எழுத்தாளர் சிவசங்கரி அவர்கள் இலக்கிய ஆர்வலர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அழகாக பதிலளித்தார். எதிர் வரும் கோடையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்த சார்லட் தமிழ்ச் சங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

# நியூயார்க் தமிழ்ச் சங்கம்




பொன் விழாக்கண்ட வட அமெரிக்காவில் தோன்றிய மூத்த தமிழ்ச் சங்கமாகிய நியூயார்க் தமிழ்ச்சங்கத்தில் மே 07 2023 அன்று பிற்பகல் மூன்று மணி முதல் இரவு 9 மணி வரை சித்திரைத் திருவிழா மற்றும் தொல்காப்பியர் நாள் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

குழந்தைகளின் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் அமெரிக்க நாட்டுப்பண்ணுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து சங்கத்தின் செயலாளர் முனைவர் திரு பாலா சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரை வழங்க, சங்கத்தலைவர் திரு இராம்மோகன் அவர்கள் சித்திரை மற்றும் தொல்காப்பியர் நாள் பற்றிய உரை வழங்கினார். குழந்தைகளின் சித்திரை மற்றும் தொல்காப்பியம் பற்றிய உரைகளுடன் விழா தொடர்ந்தது. அடுத்த நிகழ்வாக, தம்பதிகளான பாடகர்கள் திரு ஜெயராமன், திருமதி ரம்யா அவர்களின் கரோக்கி திரை இசை மழையினை விழாவில் கலந்து கொண்ட அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். விழாவின் அடுத்த நிகழ்வாக, அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்த ஸ்டேஜ் ப்ரண்ட்ஸ், நியூஜெர்சி குழுவினரின், மறைந்த பிரபல நகைச்சுவை நடிகரும், நாடகக் கலைஞருமான கிரேஸி மோகன் அவர்களின் படைப்பான "கலாட்டா கல்யாணம்" என்ற நகைச்சுவை நாடகம் பார்வையாளர்கள் அனவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. சங்கத்தின் பொருளாளர் திரு சின்னதுரை பெரியசாமி அவர்கள் நன்றியுரை வழங்க, இறுதியாக சென்னை தோசா உணவகத்தின் சுவையான இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.




# தனிமைப்படுத்தப்பட்ட இதயத்தின் கூக்குரல்

எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை
என்ன சொல்வது என்றும் தெரியவில்லை
ஒன்று தெரியும்
என் மொத்தமும் சொல்கிறது
நான் மிகவும் பயத்துடன், கவலையுடன்,
அமைதியற்று இருக்கின்றேன்
என் இதயம் கனக்கிறது
உடல் இறுக்கமாக இருக்கிறது
கைகள் வேர்த்து குளிர்ச்சியாகவும்
வார்த்தைகள் வேகமாக விழுகின்றன
ஆயிரம் விஷயங்களை
ஒரே நேரத்தில் சொல்ல முற்படுகிறேன்
நான் இங்கும் அங்கும் செல்ல விரைகிறேன்
எல்லா பதில்களையும் தேடுகிறேன்
என் மொத்த உயிரும் ஏங்கும்
அமைதியை கண்டடைய விழைகிறேன்

யாருக்கும் தெரியாது
என் இரவுகளின் இருட்டை
யாரும் புரிந்துகொள்ள முடியாது
என் இதயத்தின் பாரத்தை
நான் பதறுகிறேன், வாழ்க்கை சுமையாக
தாங்க முடியாத சுமையாக உணருகிறேன்
நானும் மனப்பூர்வமாக புன்னகைக்க விரும்புகிறேன்
அமைதிக்காக, துணிவிற்காக வலிமைக்காக ஏங்குகிறேன்
இந்த தனிமை அச்சத்தை தருகிறது
அடுத்தவர்களிடம் பேச பயப்படுகிறேன்
தனிமையும், கூட்டமும் திகிலை ஏற்படுத்துகிறது

என் கற்பனைகள் என்னை பயமுறுத்துகின்றன
தனிமையில் கற்பனையின்றி எப்படி வாழ்வது
எனக்கு பித்து பிடிக்கிறதோ என்று யோசிக்கிறேன்
கடவுளே எனக்குள் என்ன நடந்துகொண்டிருக்கிறது
என்ன ஆனது இன்பம், மகிழ்ச்சி, நம்பிக்கை
மற்றும் பிரியமாக அடுத்தவர்களுடன் இணக்கமாக பழகும்
இந்த மனித உணர்வுகளுக்கு?
எப்படி கடப்பது பயமுறுத்தும் இந்த இருண்ட காலத்தை
ஒளி வருவதற்கான எந்த வழியுமில்லாத குகைப்பாதையை

என் இதயத்தை ஆற்றுப்படுத்து
உன் பிரசன்னத்தில் என் உள்ளம் இளைப்பாறட்டும்
என் அறிவு, உடல் மற்றும் என் ஒவ்வொரு செல்லும்
உன் கனிவான இரக்கத்தின் மழையில் மென்மையாகட்டும்

என் தேவை என்ன என்று
எனக்குத் தெரியவில்லை
உனக்குத் தெரியும்
என் அச்சத்தின் தேடலில் பயமும் சீற்றமும் கொள்கிறேன்
ஒரே திசையில் நடக்கிறேன், ஓடுகிறேன்
நீ அருகில் அமைதியாக காத்துக்கொண்டிருக்கிறாய்
என் தேவைக்கதிகமான ஆற்றலுடன்
எல்லையில்லா பொறுமையுடன், ஆவலுடன் எனக்கு உதவிட

நீ தேவை, என் வலிமையே
நீ தேவை
நீ எனக்கு தேவை

முன்னெப்போதும் இல்லாதளவிற்கு தேவை
நீ இருக்கின்றாய் என்ற நம்பிக்கை எனக்கு தேவை
இல்லை உன் நெருக்கத்தை உணரவேண்டும்
நம்பிக்கை வெறும் வார்த்தையாக தெரிகிறது
மனிதர்கள் தரும் உறுதி வெற்று மொழிகளாகிறது
என் மனதை நிரப்பு, பள்ளத்திலிருந்து என்னை கைப்பிடித்து தூக்கு
கட்டியெழுப்பப்பட்ட பெரும் சுவரை சுக்குநூறாக்கி
பயத்திலிருக்கும் குழந்தையின் பயம் போக்கு

என் கைப்பிடித்து வெளிச்சத்தில் வழிநடத்து
கற்பனையில் வரும் பேயுருவங்களை
இருட்டை, பெயரற்ற அச்சமூட்டும் திகிலை
அப்புறப்படுத்து
என் அழுகையை சந்தோஷமாக்கு

இந்த துன்பம் நிறைந்த தருணங்கள்
எனக்கு பரிவையும், மென்மையையும்
அடுத்தவர் துயர் கேட்கும் இதயத்தையும்
கற்றுத்தரட்டும்
என்னை மிருதுவாகட்டும் கனிவானவனாகட்டும்
மனமுவந்து மன்னிப்பை அளிப்பவனாக
அடுத்தவரைக் குற்றம் சுமத்துவதில் தாமதிப்பவனாகட்டும்

சுயநலத்திலிருந்து, கடினமான இதயத்திலிருந்து
சுத்தப்படுத்தத்தட்டும்
உன்னைப்போல ஒருவனாய் மாற்றட்டும்
என் சோகங்களுக்காய் மட்டும்
அழுபவனாய் அல்லாமல்
ஒட்டுமொத்த மனித குலத்தின் வலிக்காகவும்
என்னைவிட அதிகம் துன்பப்படுபவர்களுக்கும்
வருத்தப்படுபவனாய் ஆக்கட்டும்

இப்படி ஒரு போராட்ட காலத்தில்
ஒரு பொழுதும் உன்மீது உள்ள நம்பிக்கையை
இழக்காதிருக்கவும்
உன்னிடமிருந்து விலகாதிருக்கவும்
கற்றுக்கொடு

பயத்திலும் தனிமையிலும் இருக்கும்
உன் குழந்தையை போல் கேட்கிறேன்



**கவிஞர் ஜேசு சுந்தரமாறன்**

உன் முகத்தின் ஒளி என் மேல் விழச்செய்
அது எனக்கு அமைதியையும் ஆறுதலையும்
தரச் செய்

பெரும்புயலுக்கு நடுவே எதுவும் அசைத்துகூட பார்க்கமுடியாத
பெரும் நங்கூர சக்தியுடன் நீ
அங்கேதான் நான் இளைப்பாற முடியும்
சிறுது நேரம் என்னை மென்மையாக தாங்கிக் கொள்
நிதானத்தை என் இதயத்திற்கு சொல்லிக் கொடு
என்னுடனே சிறிது நேரம் இரு
பயத்துடன் உள்ள என் மனதை சாந்தமாக்கு
உன் அபரிமிதமான அமைதியில் நான் மூழ்கும் வரை
உன் அமைதி என்னை ஆற்றுப்படுத்தட்டும்,
என்னை நிறைக்கட்டும், குணப்படுத்தட்டும்
பிரகாசமான ஒளிக்கதிர்களின்
களிப்பை நான் உணரச்செய்

உன் அன்பான கைகள்
என்னை அரவணைக்கட்டும்
என் பயமென்னும் ஆற்றில்
உன் அன்பான குரலை மூழ்க விடாதே

விரைந்து வா
என் கண்ணீரை துடைத்து
என் கவலையான இதயத்தை ஆற்றுப்படுத்தி
எனக்கு விடுதலை கொடு
உன் சித்தத்தில் இருக்கிறது என் அமைதி

# வட அமெரிக்கத்தமிழ் எழுத்தாளர்கள் அறிமுகம் – பகுதி 2

## பெயர்: ஹேமா ஜெய்



பிறந்த ஊர்: ஈரோடு

வசிக்கும் ஊர்: சால்ட்லேக் சிட்டி, யூடா

பணி/தொழில்: கணினி மென்பொருள்

*நவீன குடும்பங்களின் சிக்கல்களை, பெண்கள் மற்றும் முதியவர்களின் உளப் பிரச்சனைகளை மையக்கருவாகக் கொண்டு மென் வாசிப்பு ஆக்கங்களாக எழுதும் ஆர்வம் கொண்ட ஹேமா ஜெய் இதுவரை 16 நாவல்களையும், 6 குறுநாவல்களையும், 25-க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவரது படைப்புகள் கல்கி, மங்கையர் மலர், பெண்மணி, கண்மணி, தினமணி கதிர் உள்ளிட்ட அச்சு இதழ்களிலும், தென்றல் உள்ளிட்ட இணைய இதழ்களிலும் வெளியாகியுள்ளன. பல சிறுகதைகள் பரிசுகளுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.*

எழுதிய நூல்கள்:

நீ நான் நாம் வாழவே

பட்டாம்பூச்சி பற பற!

பனி இரவும் தனி நிலவும்

விழிகள் தீட்டும் வானவில்

மலரினும் மெல்லிய...

காதல் கஃபே

பூவிதழ் தூரிகை

ஆயிரம் ஜன்னல் மனசு

பூக்கள் விற்பனைக்கல்ல

ஙஞணநமன மெல்லினமாம்!

ஆனந்தி

இதழ் வரி கவிதை

நினைவெல்லாம் செண்பகப்பூ

தூரங்கள் நகர்கின்றன

கடல் சேரும் விண்மீன்கள்

மனங்கொத்திப் பறவை

மிளிர்

மலரவிழ்

துளிர்த்தெழும் தளிர்கள்

யாழினிது

சகி

அத்தியாயம் இரண்டு

## பெயர்: திரு.ஸ்ரீனிவாசன் பாலகிருஷ்ணன்

பிறந்த ஊர்: தென்காசி

வசிக்கும் ஊர்: ப்ளானோ, டெக்சாசு

பணி/தொழில்: கணினி மென்பொருள்



கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் வலைப்பூவில் தனது எழுத்துப் பயணத்தைத் தொடங்கிய ஸ்ரீனிவாசன் பாலகிருஷ்ணன் இரண்டு நூல்களுக்கு ஆசிரியர். விரிவான புத்தக விமர்சனங்களையும், சினிமா விமர்சனங்களையும் எழுதுவதில் ஆர்வமுள்ள ஸ்ரீனிவாசன் "நாடோடி எக்ஸ்பிரஸ்" என்ற பெயரில் பயணக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். இவருடைய படைப்புகளை www.seenuguru.com என்ற இணைய தளத்தில் காணலாம்.

எழுதிய நூல்கள்:

1.தற்செயலின் பின் ஒளிந்திருக்கும் கடவுள் (வாசகசாலை வெளியீடு)

2. தனுஷ்கோடி - அழிந்துபோன கதை (அமேசான் கிண்டிலில்)

## பெயர்: திருமதி. லாவண்யா.



முழுப்பெயர்: முனைவர் லாவண்யா பெருமாள்சாமி சீலன்

பிறந்த ஊர் : கோயம்புத்தூர்

வசிப்பது: இர்வைன், கலிபோர்னியா

படிப்பு: பி.ஹெச்.டி . (Cell, Molecular and Developmental Biology)

எழுதிய நூல்கள் மற்றும் சிறுகதைகள்: இதுவரையில் திருமதி. லாவண்யா என்ற பெயரில் 16 நாவல்கள் அருணோதயம் பதிப்பகத்தாரின் வழியே புத்தகமாக வெளி வந்துள்ளன. அத்துடன் லாவண்யா பெருமாள்சாமி என்ற பெயரில் சில சிறுகதைகள் ஓம் சக்தி, தினமணிக் கதிர், இணையதளம் மற்றும் மின்னிதழ்களிலும் வெளிவந்துள்ளன. இச்சிறுகதைகள் ஒரு தொகுப்பாக அமேசான் கிண்டிலில் இருக்கிறது.

**எழுதிய நூல்கள்:**

1. காதலின் சாரலிலே (2012)
2. அக்கரைச் சீமையிலே (2012)
3. அன்பென்ற மொழியிலே(2013)
4. உறவுகள் (2014)
5. வைகறை வெளிச்சம் (2014)
6. தீயில்லை புகையில்லை (2015)
7. நேசம் கொண்ட நெஞ்சங்கள்(2015)
8. மூடுபனி நெஞ்சம் (2016)
9. அத்திப்பூ புன்னகை (2016)
10. வைரமே உன்னைத் தேடி(2016)
11. மின்மினிக் கனவுகள் ( 2017)
12. இதழில் கதை எழுது (2017)
13. உயிரோடு உறவாக (2018)
14. சின்னஞ்சிறு இதயத்திலே(2019)
15. உயிரால் உனையே விரும்புகிறேன்(2020)
16. தித்திப்புடன் காதல் (2020)
17. நிஜமடி பெண்ணே (பிரசுரத்துக்கு அனுப்பி வைத்திருக்கும் கதை )

# மினசோட்டா தமிழ்ச் சங்கம்



மினசோட்டாத் தமிழ்ப்பள்ளியின் 15 ஆம் ஆண்டு விழா ஹாப்கின்ஸ் நகரில் உள்ள ஐசனார் கம்யூனிட்டி சென்டரில் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

2008 இல் 10 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட மினசோட்டாத் தமிழ்ப்பள்ளி, 15 ஆண்டுகளாக மினசோட்டா மாநிலத்தில் தமிழ் மொழியினைச் சிறப்பாகக் கற்றுக் கொடுத்து வருகிறது. தற்போது 400க்கு மேலான மாணவர்களோடும் மூன்று கிளை களோடும் தமிழ்ப்பணி செய்து கொண்டிருக்கிறது. இரு மொழி முத்திரை (Bilingual seal) பெற்ற 37 மாணவர்கள், ACTFL மற்றும் IPA பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எனப் பல சிறப்புகளோடு தமிழ்ப் பள்ளியின் பயணம் தொடர்கிறது.

கொரோனா பெருந்தொற்றால், கடந்த மூன்று ஆண்டுகளாக நேர்முகமாக நடத்தப்படாத பள்ளி ஆண்டு விழா, இந்த ஆண்டு பெரிய அளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தமிழ்ப்பள்ளியின் மூன்று கிளைகளிலிருந்தும், எல்லா நிலை களிலிருந்தும் கிட்டத்தட்ட 300 மாணவர்கள் ஆர்வமாகப் பங்கு கொண்டு தங்களின் திறன்களை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சி முழுவதையும் இவ்வாண்டின் இரு மொழி முத்திரை நிலை மாணவர்களே தொகுத்து வழங்கியது ஒரு தனிச் சிறப்பு.

மேல் நிலைப்பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் தமிழ்ப்பள்ளியின் மேனாள் மாணவர்களும் வருகை தந்து பெருமை சேர்த்தனர். நாடகம், நாட்டியம், பட்டிமன்றம் ,கவிதை எனப் பல வகைகளில் மாணவர்கள் திறமைகளை வெளிக்காட்டினர். திரையிசை கலப்பின்றி தமிழ்க் கலைகளை மட்டுமே முன்னிறுத்தி ஆறு மணி நேரத்திற்கும் மேலாக நிகழ்ச்சிகளைச் மாணவர்கள் அரங்கேற்றியது மிகவும் சிறப்பாக இருந்தது. பார்வையாளர்கள் இறுதி வரை இருந்து மாணவர்களை ஊக்கப்படுத்தினர்.

மினசோட்டா மாநில உலக மொழி சிறப்புக் கல்வித்துறை நிபுணர் திருமிகு ஐயூமி ஸ்டாக்மன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி, தமிழ்த்தேனீ (spelling bee) மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

# அரிசோனா தமிழ்ச் சங்கம்










அரிசோனா தமிழ்ச் சங்கம் ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி உறியடி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நம் தமிழ் மக்களுக்காகப் பல போட்டிகள் நடத்தப்பட்டன. திருக்குறள் ஒப்புவித்தல், ஓவியப் போட்டி, மாறுவேடப் போட்டி - சிறுவர்களுக்கு நடத்தப்பட்டது.

பெரியவர்களுக்குச் சமையல் போட்டி, வினாடி வினா நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. பல்வேறு விளை யாட்டுப் போட்டிகளும் நடத்தப் பட்டன. நம் தமிழ்க் குழந்தைகள் பலர் அழகாய் 75 குறள்களை மிக எளிதாகக் கூறியதைப் பார்க்க மிக மகிழ்வாக இருந்தது. குறட்பாக்களைக் கூறியதும், பரிசுகளை அள்ளிச் சென்றதையும் பார்க்கையில் பெருமிதமாய் இருந்தது. எங்களது அடுத்த கொண்டாட்டம் தமிழ்ப் பள்ளியின் பட்டமளிப்பு விழா. அரிசோனா தமிழ்ப் பள்ளி- பீனிக்சு மற்றும் சாண்ட்லர் தங்களது பட்டமளிப்பு விழாவை மே மாதம் 14ம் தேதி கொண்டாடியது. இந்த கல்வியாண்டு முழுவதும் அயராது உழைத்த குழந்தைகளைக் கொண்டாடும் விதமாக இவ் விழா அமைந்தது. தங்களது பொன்னான நேரத்தைக் கொடுத்து, கற்றுக் கொடுத்த ஆசிரியர் களுக்கு நன்றி கூறும் விழாவா கவும் இது அமைந்தது. வாரந்தோறும் தவறாது குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வந்த பெற்றோர்களுக்கு நன்றி கூறும் விதமாக அறுசுவை விருந்து வழங்கப் பட்டது.

# நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம்




நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டு சித்திரைத் திருவிழா மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. வசந்தத்தை வரவேற்க நியூ ஜெர்சி தமிழ் மாணாக்கர்கள் வழங்கிய தமிழிசையோடு துவங்கி, தமிழ்ப் புத்தகக் கண்காட்சி, தமிழில் நியூ ஜெர்சி மாநில இரு மொழி முத்திரை பெற்ற மாணாக்கர்களுக்கு "தாய்த் தமிழ் விருது" வழங்குதல் என்று பல நிகழ்ச்சிகள் இனிதே நடைபெற்றன. சிறப்பு விருந்தினர்களாக, திரு. மாலன் நாராயணன் மற்றும் முனைவர். திரு. வாசு ரெங்கநாதன் ஆகியோர் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்தனர். சித்திரை விழாவின் முத்திரை நிகழ்வாக திரு. ராஜேஷ் வைத்தியா அவர்களின் மந்திரக் கைகள் மீட்டிய "வீணை இசையில் தமிழ்த் திரையிசை" என்ற நிகழ்ச்சி வருகை தந்திருந்த அனைவரின் உள்ளங்களையும் மகிழ்வடையச் செய்து மனதைக், கொள்ளைக் கொண்டது.

# ரோட் ஐலண்ட் தமிழ்ச் சங்கம்

ரோட் ஐலண்ட் தமிழ்ச் சங்க உறுப்பினர்களால் கடந்த ஆண்டு அக்டோபர் 30, 2022 அன்று ஈஸ்ட் ப்ரொவிடன்ஸில் “வாண வேடிக்கையுடன் கரோக்கி இசை நிகழ்ச்சி” நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் சுமார் 650 மேற்பட்டோர் தன் குடும்பங்களுடன் இணைந்து பட்டாசுகள் வெடித்து, இசை மழையில் நனைந்து, சிற்றுண்டி உண்டு, தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார்கள்.

இதனைத் தொடர்ந்து “குழந்தைகள் தினவிழா” நவம்பர் மாதம் இரு பிரிவுகளாகப் பிரித்து வார்விக்கில் நடத்தப்பட்டது . நவம்பர் 5, 2022 அன்று நடந்த, முதல் பிரிவில் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளும், நவம்பர் 19 2022 அன்று நடந்த இரண்டாம் பிரிவில் ஆடல், பாடல்,ஆடை அலங்கார அணிவகுப்பு, விளையாட்டுப் போட்டிகளும் இனிதே அரங்கேறியது. இதில் 350 மேற்பட்ட தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்துடன் பங்கேற்றனர்.



இந்த ஆண்டு, பிப்ரவரி 18, 2023 அன்று “உழவர் திருநாள் கொண்டாட்டம்” ஜான்ஸ்டனில் நடைபெற்றது. விருந்தினர்களுக்கு கரும்பு, மல்லிகைப்பூ அளித்து வரவேற்று, வாழை இலை விருந்து பரிமாறி, பாரம்பரிய முறையில் ஆடல்,பாடல்,விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, மிகச் சிறப்பான முறையில் உழவர் திருநாள் கொண்டாட்டம் நடந்தது. இதில் 450-க்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்துடன் பங்கேற்றனர்.

இது மட்டுமல்லாது ஜூன் 24,2023 அன்று டாக்டர்.திரு.பால் அவர்கள் தலைமையில் “ஆரோக்கியமே செல்வம்” என்கிற மருத்துவ விழிப்புணர்வு சார்ந்த கேள்விகளுக்கான நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. ரோட் ஐலண்ட் வாழ் தமிழ் நெஞ்சங்கள் அனைவரும் இந்நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டு பயன்பெறுவர்கள் என்று எண்ணுகிறோம்.

# அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம்

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம் கடந்த சில மாதங்களில் சிறப்பான பல நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது!

சென்ற ஏப்ரல் மாதம், 29 ஆம் நாள், “இயற்கையின் இணைவினிலே! இனிக்கட்டும் இளவேனில்!“ என்னும் கருப்பொருளில் அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் சித்திரைத் திருவிழா இனிமையாக நடந்தேறியது. எமது செயற்பாட்டுக் குழுவின் புதிய முயற்சியாக, ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய குறிக்கோள்களில் ஒன்றான “ நிலத்தின் நிலையான பயன்பாட்டினை (SDG: Life on Earth)” எம்மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் விதமாக இந்நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டு இருந்தது. குறைந்த பயன்பாடு, மறுபயன்பாடு, மறுசுழற்சி (Reduce, Reuse, Recycle) ஆகியன நிகழ்ச்சியின் முக்கியக் குறிக்கோளாகக் காணப்பட்டது.




சித்திரைத் திருவிழா சிறியோர் பெரியோர் களுக்கான் போட்டிகள் மற்றும் வேடிக்கை விளையாட்டுகளுடன் ஆரம்பமானது. இதில் சிறப்பம்சமாக “2023 சித்திரைச் செல்வி” போட்டி நடத்தப்பட்டது. இது தவிர ஓவியப்போட்டி, கைவினைப் பொருட்கள் செய்யும் போட்டிகள் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அறுசுவையான மதிய விருந்துடன் அட்லாண்டா இசை மழைக் குழுவின் இன்னிசை விருந்தும் அரங்கேறியது. மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட சித்திரைத் திருவிழா உள்ளூர் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள், “ஆண்டு மலர் 2022” புத்தக வெளியீடு, உள்ளூர் விற்பனையாளர்கள் சாவடி, சிற்றுண்டி நிலையம் என்ற பல அம்சங்களுடன் கோலாகலமாக நடந்தது. இவை மட்டுமன்றி, கருப்பொருளை ஒட்டிய சிறப்பு நாட்டிய நாடகம், சிறார்களின் பறை இசை, சிலம்பாட்டம் இவையெல்லாம் நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக அமைந்து அழகு சேர்த்தது!

மே மாதம், அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, பூப்பந்து நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் 130க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டு, தங்கள் திறமையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தினர். 130க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்து, அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் நல்லதொரு அனுபவத்தை வழங்கும் விதமாக, மென்பொருள் உதவியுடன் போட்டிகளைத் தடையின்றி நடத்தி, அனைத்து பங்கேற்பாளர்களின் திறமை மற்றும் ஆர்வத்தை முழுமையாக வெளிப்படுத்தும் வகையில் போட்டிகள் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது!

அடுத்து, மே மாதம் 20 ஆம் நாள், பெண்மையைப் போற்றும் சிறப்பான நிகழ்வான "பாவை 2023" (WOW 2023) அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தால் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. மகளிர் மட்டும் பங்கேற்கும் இந்த சிறப்பான நிகழ்வில், அழகு, அறிவு, மற்றும் திறமையை பறைசாற்றும் விதமாக, திருமிகு. GATS - 2023 போட்டி நடத்தப்பட்டு, வெற்றியாளருக்கு மகுடம் சூட்டப்பட்டது. மேலும், குழு மற்றும் தனி நடனப் போட்டிகளும் சிறப்பாக நடந்தேறியது. பெண்களுக்கான இத்திருவிழாவில், வகை வகையான உணவு, வரவேற்பு பானம், அலங்கரிக்கப்பட்ட புகைப்பட நிலையம் (photo booth), ஆடல், பாடல், வித விதமான விளையாட்டு போட்டிகள் என நிகழ்ச்சிகள் களை கட்டியது. அது மட்டுமன்றி, நடனம், மருத்துவம், அழகியல், தொழில்துறை இப்படி வெவ்வேறு துறைகளில் புகழ்பெற்ற பல பெண்மணிகள் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்தது, சிறப்பான அம்சமாக அமைந்திருந்தது.


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 36வது தமிழ் விழா
சாக்ரமெண்டோ, கலிபோர்னியா
ஜூன் 30, ஜூலை 1, 2 - 2023
தொன்மை, தமிழரின் பெருமை...
TAG
#பெட்னா23_கன்று
#fsm2023_plant
தளிரும் தமிழும்
தழைக்கட்டும்...
வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 36வது தமிழ் விழாவையொட்டி என்றும் நினைவில் நிற்கும்படியாக ஒரு பயன் தரும் மரக்கன்றோ, அழகிய மலர் தரும் செடியோ உங்கள் இல்லத்தில் நட்டு ஒரு படம் பிடித்து அனுப்புங்கள். மகிழ்ச்சியை சங்கிலித் தொடராக்க உங்கள் நண்பர் ஒருவரை தொடுத்திடுங்கள் (Tag).
#பெட்னா23_கன்று அல்லது / #fsm2023_plant என்ற சிட்டை (Hashtag)யில் @fetnaConvention முகவரியைத் தொடுத்து கீச்சிடுங்கள் அல்லது முகநூலில் பதிவிடுங்கள். விழா நாளன்று கீச்சுப் பக்கங்களை நேரலையில் பகிர்ந்திடுவோம்.
நீங்கள் நடும் மரம் தமிழ் போல் தழைக்கட்டும். பெட்னா போல் மலரட்டும். யாவரும் கேளிர் என நம்மைப் போலவே அதன் விழுதுகளும் வேரும் பரவட்டும்.
To Register :
...தளிரும் தமிழும் தழைக்கட்டும்...
Register NOW
FeTNA 36th CONVENTION
SAFE Credit Union Performing Arts Center
1301 L St, Sacramento, CA 95814
June 30, July 1, 2 - 2023
fetna-convention.org
sactamil.org
fetna.org
https://register.fetna-convention.org/
Register NOW

**FiTEN**
FeTNA International Tamil Entrepreneur Network

# GLOBAL TAMIL ENTREPRENUERS SUMMIT

JUNE
30
(Friday)

**FiTEN SACRAMENTO 2023**
**36th Annual FeTNA Convention**
Sacramento, California

TIME
8.30AM
5.30PM
(PST)

## Hear Perspective and Insights



fitenchair@fetna.org | fiten.org

Register at fetna-convention.org